KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

## A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஹு பிப்ரவரி மீ 25உ [No. 8

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 141
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா—சுயம்வர காண்டம் 143
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 145
4. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 148
5. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 150
6. கம்பராமாயணம் (அகத்தியப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 152
7. தினகர வெண்பா
S. வையாபுரிப்பிள்ளை B A. B.L. 155
8. மல்லிகை மலரே—ஒரு சிறு பாட்டு
V. ராம ராவ் 157
9. வர்த்தமானம் 159

## கலாநிலயம்

### இரக்கத்திற் கிடம்.

இரக்கமின்றி எத்தனையோ பலர் மற்றவர்களை வருத்தக் காண்கின்றோம். நீதியாகுமோ இதுவென்று நினைக்காமலே நிகழ்கின்ற காரியங்கள் பலப்பல. எசமானன் வேலையாளையும், முதலாளி கடன்காரனையும், கணவன் தன் மனைவியையும், மனைவி கணவனையும், பெற்றோர் மக்களையும், மக்கள்தாம் தம் பெற்றோரையும், வலியோர் மெலியோரையும் எங்கெங்கும் படாதபாடு படுத்திவைக்கின்றனர். பொதுவகையில் நோக்குமிடத்து, பிறர் செய்யும் பொல்லாத கொடுமைகளுக்கு ஆளாகித் துன்பப்படுபவர் மாட்டே நம்முடைய இரக்கம் செல்கின்றது. "இவன் நல்லவன், கள்ளங் கபடற்றவன், வருந்தியுழைத்துத் தன் குடும்பத்தை நல்லநிலையில் வைத்துக் காப்பாற்றுகின்றான். தன்மனைவியை அவன் 'சீ' என்று உரப்பி யான் கண்டதில்லை. ஆயினும், அம்மனைவியோ உருத்திரகாளி. கணவனைக் காணுந்தோறும் அவள் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கும். வேளைக்குச் சோறு போட்ட நாளில்லை. செத்தாலும் ஏனென்று கேட்கமாட்டாள். இந்தப் படுபாவி கையில் அகப்பட்டுக்கொண்டு அந்தமனுஷன் படுகின்ற கஷ்டத்தைப்பார்த்தால் எனக்கு நிரம்பக் கண்டிராவியா யிருக்கிறது"—என்ற வார்த்தைகள் இதே முறையில் அடிக்கடி மாந்தர்வாயில் வர எல்லாரும் கேட்டிருப்பார். (மனைவியை இரக்கமின்றி நடத்துகின்ற புருடனுக்கும் இது ஒக்கும்.) இப்படிக் 'கண்டிராவிப்பட்டு'ப் பேசுகின்றவர்களெல்லாம் தம் கணவனை (அல்லது மனைவியை) நீதியும் அன்பும் நிலைக்கும் வண்ணம் நடத்துகின்றார்களோ, என்னில்—அவ்விடயம் வேறு. அதுபற்றி யன்று நாமிங் கறையப்புகுவது. பேசுகின்ற பரிவுதான் மெய்யேனும் அல்லது முழுப் பொய்யேனும், பேசுபவர்தாம் இரக்க முடையவரேனும் அல்லரேனும், இத்தகைய வாசகங்களிலிருந்துஒன்றுதெரிகின்றது. ஒருவரை ஒருவர் வருத்துகின்றபோது, அவ்வருத்தத்திற்கு ஆளாகியஏழையின்மாட்டே நம் இரக்கம் செல்கின்றதென்னும் செய்தியை இங்குத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆம், இது என்ன பரம இரகசியம்? செப்பல்வேண்டுமோ! அடிபட்டவனிடத்தில்நம்இரக்கம்சேர்வதன்றி வேறு யாரிடத்தில் செல்லக்கூடும். மற்று, அடித்தவனைக் கண்டா இரங்குவது—என்று இச்சமயம் சிலர், எண்ணலாம். உலகத்தில் இக்காலம் நிகழ்கின்ற உபகார தருமங்களெல்லாம் பெரும்பாலும் இந்த எண்ணம் பற்றியே நடக்கின்றன. குறைந்த கூலியும் மிகுந்த வேலையுமாய்த் தொழிலாளர் எசமானர்களால் துன்புறுத்தப்பெறுகின்றார்கள் என மதித்து அவ் வீதிக்கு ஆளாகி நிற்பவர்போல் தோன்றுகின்ற அத்தொழிலாளரிடத்தே இரக்கம் கொண்டதாய் இயம்பிச் சங்கங்களாலும் சட்டங்களாலும் தொழிலாளர்களுக்கு உபகாரஞ்செய்யத் தலைப்படுவார் ஒரு சாரார். முதலாளிகள் அநியாயமாய் வட்டி வாங்குகிறார்களென்று கடன்காரரிடத்தில் இரக்கங்கொண்டு அவர்களைக் காப்பதற்குச் சட்டங்கள் நிறுவப்பெறுகின்றன. குதிரை மாடு முதலிய மிருகங்களை இரக்கமின்றிப் புண்பட ஓட்டுகின்றார்களென்று அவ்விலங்குகளைக் காப்பதற்கு அமைகின்ற இரக்கமுடைய சட்டங்கள் பல. தீண்டாதார் தாழ்த்தப்பட்டோர் என்றபேர்களுக்குட்பட்ட சிலர் மற்றவர்களால் துன்புறுத்தப்பெறுகின்ற

னர் என்ற எண்ணமுடன் அவர்பால் இரங்கலாகி அவர்களுடைய நிலைமையைக் காப்பதற்குச் செய்யும் முயற்சிகள் பலவாம். இப்படியே உதாரணங்கள் பல பெருக்கிக்கொண்டே போகலா மெனினும், இவ்வினத்தைச்சார்ந்த உபகார வகைகளும் அவ்வுபகாரத்தின் நோக்கங்களும் யாவரும் எளிதில் நினைவுபடுத்திக்கொள்ள இயலுமாதலின் இதனோடு நிறுத்திக் கொண்டு இதனின்று எழுகின்ற சில கருத்துக்களை இனிச் செப்புவோம்.

பரிவுடன் புரியப்பெறுகின்ற இவ்வுபகாரங்கள், விலக்கநினைத்த துன்பங்களை உண்மையில் எத்தூரம் விலக்கிவைக்கின்றன என்பதை நாம் முதலில் சற்றே ஆராய வேண்டும். உலகத்திலே உழல்கின்ற துன்பங்களின் தொகுதியில் எள்ளளவேனும் ஏதேனுங் குறைந்துவரக் காண்கின்றோமோ? அல்லது, தனித்தனி அவரவர் ஆளாகிய துன்பந்தான் தீர்கின்றதோ? அதுவுமன்றி மற்றவர்களுக்குத் துன்பஞ் செய்கின்றவர்தாம் தாமே துன்பப்படாமல் இருக்கின்றாரோ? தற்காலம், எது செய்வதற்கும், "நேரமில்லை, நேரமில்லை" என்றொரு சொல் எல்லார் வாயிலும் வருவது வழக்கமாகிக் கிடக்கின்றது. "இலக்கிய நூல்கள் ஏதேனும் படிக்கின்றீரோ?" என்று கேட்டால், பெருமையுடன் நகைசெய்து, "சரிதான், நான் வாங்குகின்ற வர்த்தமானப் பத்திரிகைகளை வாசிப்பதற்கே நேரமில்லை, இலக்கியங்களை நான் எங்கிருந்து படிப்பது" என்ற பதிலைப் பெற்றிலாதவர் மிகச் சிலரே. அது கிடக்கட்டும். பொதுவிலே எதற்கும் நேரமில்லை என்ற நினைவினுள் பொதிந்திருக்கின்ற உண்மையை உற்று நோக்கினால் ஒன்று வெளிப்படும். 'பொழுது போகவில்லையே' என்று ஏங்குவாரும் சிலருளர். அறிவும் நன்மையும் மெய்யின்பமும் நாடுபவர்க்கு, 'நேரமில்லையே' என்றேனும் 'பொழுது போகவில்லையே' என்றேனும் நினைத்திருக்க நியாயமில்லை. அன்னவர்க்கு எக்காலமும் பொழுது போய்க்கொண்டேயும் இருக்கும்; எதற்கும் நேரம் இருந்துகொண்டேயும் இருக்கும். எனின் ஆழ்ந்துநோக்குமிடத்து, 'பொழுது போகவில்லை' என்பதற்கும், "நேரமில்லை என்பதற்கும்" அந்தத்தில் பேதம் ஒன்றும் இல்லாமை புலப்படும். 'பொழுது போகவில்லை' என்பவன், தனக்கு வரவேண்டிய துன்பங்கள் முழுவதும் இன்னும் வந்து சேரவில்லையே என்று காத்துக் காத்துச் சலித்தவனாகின்றான்; 'நேரமில்லை' என்பவன் தனக்குவந்துள்ள துன்பங்கள் முழுவதையும் இன்னும் அனுபவித்துத் தீராத குறையோடு அவ்வாறு தீர்வதன்முன் அவை ஒருகால் போய்விடுமோ, என்றஞ்சி அலைகின்றவனாகின்றான். இதனில் பேதம் உளதென்று நினைப்பார் மகிழ்வதெனில் மகிழ்க; சரிதம் ஒன்றே. வருத்துவார் வருந்துவார் என்னும் அவ்விரு திறத்தோரில், வருத்துவாரைக்கடிந்து வருந்துவோர்க் கிரங்கிச் செய்கின்ற உபகாரங்கள் ஒருவர் துயரத்தையுந் தீர்த்தபாடில்லை. இதனால் உபகாரசிந்தனை உயர்வற்றதென்று யாம் உரைக்கின்றோமென எண்ணிவிட வேண்டா. நம்முடைய கடமை யிதுவென்று அண்டையிலிருந்து தூண்டுகின்ற நம் மனச்சாக்ஷியின் குரலிற்கு மட்டுமே செவி கொடுத்து மற்றதொன்றையும் கேட்காமலிருப்பதெனின், எளியோர்க் கிரங்கி அவர்தம்மை வலியோர் கைகளினின்று காக்கவிரைகின்ற கருமத்தினுஞ் சிறந்தது வேறொன்றுமில்லை. எனினும், இந்தக் கடமையைச் செய்வதாகிய உபகாரங்களிலேயே உலகத்திலுள்ளோர் அனைவரும் ஓரே சமயத்தில் ஈடுபட்டிருப்பாராயின், இறுதியில் இவ் வுபகாரமுயற்சியெல்லாம், நெடுங்காலம் நிலைத்திலாது தீர்ந்துவிடும் என்பது நிச்சயம்.

இந்தக் கடமையைச் செய்கின்ற உத்தமர்கள்தம் முயற்சியினிடையே அதனையுங் கடந்து அப்பால் நினைக்கின்ற வீரர் சிலர் வேண்டும். எதையுஞ் சொல்வது எளிது, செய்வதுதான் அரிது என்று கருதுவது உலக வழக்கு. இம்முறை முற்றிலும் உண்மையன்றென்பதைப் பண்டையதலையங்கங்களிலொன்றில் விளக்கியிருக்கின்றோம். செய்வதைக்காட்டிலும், செய்யவேண்டியது எதுவென்று நேராக எடுத்துச் சொல்வதற்கு ஆழ்ந்த சிந்தனையும் சுய ஆராய்ச்சியும் அதிகம் வேண்டும். மற்றவர்க்கொன்று எடுத்துச்சொல்வதன்முன் நாம் நம்முடனேயே முதலில் பேசிப்பேசிப் பழகிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாம். அப் பழக்கத்தில் ஈடுபட்டவர் பலர், தாம் விரைந்து நாடிச் செய்யவேண்டிய உபகாரங்களைச் செய்யாமல் தம் கடமையை மறந்திருப்பவர்போல் மேல்பார்வைக்குத் தென்படுவர். இந்த வகைக்குத் தாம் ஆளாயினும் ஆகுக எனத் துணிந்து, உறுபொருள் நாடி உரைப்பதற்கே முயல்கின்றார்களாதலின் அவர்களை வீரரென அழைததோம்.

அத்தகைய ஆராய்ச்சியில் ஆழ்ந்தெழுங்கால் அருமையாய உண்மையொன்று திரண்டுநிற்கும். அதனை ஒரு வாக்கியத்தில் உரைத்துவிடலாம். வருத்துவோர் வருந்துவோர் என்னும் இவ்விரு திறத்தோரில் வருந்துகின்றவர்களைக் காட்டிலும் வருத்துகின்றவர்களே நம்முடைய இரக்கத்திற்குப் பாத்திரமாகின்றார். ஒருவர் மற்றவரை வருத்துவதற்கெல்லாம்காரணம் அன்பு இல்லாமையே. பிறரிடத்திலிருந்து அவர் அன்பைப் பெறமாட்டாதவர் வருந்தும்படி நேர்கின்றது. எனினும், பிறர்பால் அன்பும் அருளும் கொள்ளமாட்டாத நிலையின் துயரமோ மிகப் பெரியது. ஆதலாற்றான், கொடியவைகளைச் செய்பவர்களைக் கண்டே நாம் அதிகமும் இரங்கவேண்டியவர்களாயிருக்கின்றோம். அவர் தாம் அன்பு சுரந்த சிந்தையராகும்படி உபகாரம் செய்யப்பெறுவதற் குரியவராகின்றார். அத்தகைய உதவி இருதிறத்தோர் துயரையும் ஒருங்கே தீர்க்கவல்லதாகின்றது. அவ்வுதவிக் களஞ்சியமாவது கலைகளன்றி இல்லை பிற. வலியவர் செய்கின்ற நலிவினால் மெலிகின்றவர்களை முற்றிலுங் காத்திருத்தலரிது. அடிக்கின்ற தடியைப் பிடுங்கிக்கொண்டால் அறுக்கின்ற கத்தியைக் கைக்கொள்வார். மற்று, இம்மெலியோர் தாமும் தம்மின் எளியோரை இவ்வாறே அமயம் வாய்த்தவிடத்துத் துன்புறுத்துகின்றவரும் ஆவார். ஆதலின், மெலியவர்பால் கொண்ட இரக்கம் பெரும்பாலும் இடம் பிறழ்ந்து முடிவதுண்டு. மற்று, வலிமையிருந்தும், அதுகொண்டு மற்றவர்களைத் துன்புறுத்துவதால் தமக்கு இன்பமும் நன்மையும் விளையுமென்று வீணே எண்ணிப் புண்படுகின்ற பேதையர்களன்றே எல்லா வகையிலும் இரங்குதற் குரியவராகின்றார். கையைக் கட்டிவைப்பதால் எண்ணமோ மாறாது. அவ்வெண்ணம் மாறுவதற்கு அவர் மனத்தில் அன்பும் அருளும் சுரத்தல் வேண்டும். அன்பினைத் தூண்டவல்லது அன்பே யாதலின், கொடியன செய்வார்பால் இரக்கமுடன் அன்பு பூண்டொழுகலே, கடமையாகின்றது. எனின் மெலியோரைக் காக்க விரைவதனினும் வலியோரைக் கலைகளின்நலத்தினால் கவர்ந்துகொள்ள முயல்வதே முறை.

# தமிழ்ப் பாடம் 8.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[126-வது பக்கத் தொடர்ச்சி]

எழுவடுதோண் மன்னு விலங்கிழையேர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 20.

கருத்து:—'நான் சொன்ன தமயந்தி, வளம் மிகுந்த விதர்ப்பநாட்டு அரசனது மகள்' என்று அன்னம் நளனுக்கு மறுமொழி கூறியது. இந்தச் செய்யுள் முதல் 24-வது செய்யுள் வரையிலும் தமயந்தியின் குலம் குணம் அழகு முதலியவைகளை அன்னம் நளனுக்குப் புகழ்ந்துரைத்த சொற்கள்.

---

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு. 21.

பதப்பிரிவு:—நால் குணமும் நால் படை ஆ ஐம் புலனும் நல் அமைச்சுஆ ஆர்க்கும் சிலம்பே அணி முரசுஆ வேல்படையும் வாளுமே கண்ஆ வதனம் மதி குடை கீழ் ஆளுமே பெண்மை அரசு.

கருத்து:—அந்தத் தமயந்தி மாதர்க்குரிய சிறந்த குணங்கள் வாய்ந்து மெய்யறிவு உடையவளாய் மிகுந்த அழகோடு கூடி வாழ்கின்ற வொரு பெண்ணுவாள்.

பதவுரை.

நால் - நான்கு
குணமும் - குணங்களும்
நால் - நான்கு
படை ஆ - சைனியங்களாகவும்,
ஐ - ஐந்து
புலனும் - இந்திரியங்களும்
நல் - நல்ல
அமைச்சுஆ - மந்திரிகளாகவும்
ஆர்க்கும் - ஒலிக்கின்ற
சிலம்பே - சிலம்பென்னும் ஆபரணங்களே
அணி - சைனியத்திற்கு உரிய
முரசுஆ - பேரிகையாகவும்,
கண்ணே - கண்களே
வேல்படையும் - வேலாயுதமாகவும்
வாளும் - வாளாகவும்,
வதனம் - முகமாகிய
மதி - சந்திரன்போன்ற
குடைக்கீழ் - குடையின் நிழலில்,
பெண்மை - (தனது) பெண்தன்மை என்னும்
அரசு - இராஜ்பத்தை
ஆளும் - (தமயந்தி) ஆள்கின்றுள்.

விளக்கம்:—ஆளும் - ஆள்கின்றுள் (பயனிலை). யார் ஆளும்? தமயந்தி. தோன்ரு எழுவாய்; அதாவது, எழுவாய் இச்செய்யுளில் இல்லை. சந்தர்ப்பத்தை நோக்கித் 'தமயந்தி' என்னும் எழுவாயை வருவித்துக் கொள்ளவேண்டும். தமயந்தி எதை ஆளும்? அரசு ஆளும்-இராஜ்பத்தைஆளும். எந்த அரசைத் தமயந்தி ஆளும்? பெண்மை அரசு ஆளும் - பெண்தன்மை (womanhood) என்னும் அரசை ஆள்கின்றுள் [இராஜ்யம் என்பது பெண்மை; அதை ஆள்பவள் தமயந்தி. ஆனல், அரசிற்கு வேண்டிய அங்கங்கள் இந்த ஆட்சியில் இருந்தனவோ எனின், ஆம் இருந்தன. அவைதாம் சைனியம் மந்திரி முரசு வேலாயுதம் வாள் வெண்கொற்றக்குடை, போன்றன.] ஆயின் அவளுக்கு அமைந்த நால்வகைச் சேனைகள் எவை? நால்குணமும் நால்படையாக-அச்சம் நாணம் மடமை பயிர்ப்பு என்னும் பெண்களுக்கு உரிய நான்கு குணங்களும் அவளுக்கு இரதம்கஜம் துரகம் பதாதி என்னும் சதுரங்கசேனை ஆகவும் ஆளுவாள். அவளது அமைச்சர் யார்? ஐம்புலனும் நல் அமைச்சு ஆக - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து புலன்களும் பொய் வழிச் செல்லாமல் விஷயம் இருக்கின்ற விதத்தை அவளுக்கு உண்மையாய் எடுத்துக் காட்டுகின்ற தன்மையால் நல்ல மந்திரிகளாகவும். முரசு எது? ஆர்க்கும் சிலம்பே அணி முரசு ஆக - ஒலிக்கின்ற சிலம்புகளே முரசவாத்தியங்கள் போலச் சப்தம்செய்யவும். வேலாயுதமும் வாளாயுதமும் எவை? வேல்படையும் வாளும் கண்ணாக - கூரிய பார்வையால் வேல்போன்றும், ஒளியொடு வடிவத்தால் வாள்போன்றும் இருக்கின்ற அவளது கண்களே அவ்விரு படைகளாகவும். இந்த அங்கங்களோடு பெண்மை என்னும் அரசை அவள் எந்தக் குடையின்கீழ் ஆண்டனள்? வதனம் மதிக்குடைக்கீழ் ஆளும் - வடிவத்திலும் பிரகாசத்திலும் குளிர்ந்த தன்மையிலும் அரசரது குடைபோன்றிருப்பது சந்திரன்; அதே தன்மைகளால் சந்திரனும் அவள் முகத்தை ஒக்கும். ஆதலால் தனது முகமாகிய குடையின்கீழ் அவள் அரசு செலுத்தினுள்.

விரிவுரை:—தமயந்தியின் குணநலன்களை அன்னம் உருவக அணியினல் சிறப்பித்துக் கூறுகின்றது. எந்த விஷயத்தைப் பற்றிச் சொல்ல நேர்கின்றதோ அதற்கும் அதற்கு உவமையாய பொருளுக்கும் வேறுபாடு உண்டு என்னும் நினைவே நம் மனதில் உண்டாகாதபடி கூறுவது உருவக அணி. (70 வது பக்கம்.) உருவக அணியைக் கவிகள் பலவிதமாய்க் கையாள்கின்றனர். இந்தச் செய்யுளில் பெண்மை அரசு, (பெண்மையாகிய இராஜ்யம்) என்பதனல் தமயந்தியினது பெண்மையாகிய தன்மையை ஒரு இராஜ்யமென்று உருவகப்படுத்தி யிருக்கின்றுர். ஆனல் அதனேடு நிற்காமல் அரசாட்சிக்கு வேண்டிய அங்கங்களும் இவளிடத்தில் இருந்தனவென்று காட்டிப் 'பெண்மை என்னும் அரசை ஆண்டனள்' என்ற கருத்தை இச்செய்யுள் முற்றுவிக்கின்றபடியால் இச்செய்யுள் முற்று உருவக அணி ஆகும். ஒவ்வொரு அணிக்கும் பலவகைகள் உண்டு. முற்று உருவகம் என்பது உருவக அணியின் ஒருவகை. மற்றவகைகளை இடம் வந்தபோது கூறுவோம். இந்தச் செய்யுளிலேயே தொகை யுருவகம், விரியுருவகம்,உருவகவுருவகம் என்னும் உருவக அணியின் வகைகளில் இன்னும் மூன்று அமைந்திருக்கின்றன. எனினும் சிறிதுசிறிதாகப் பாடம் வளர்வதே படிப்போர்க்கு எளிதாயிருக்கும் என்னும் கருத்தினல் அவைகளைப் பற்றி இங்குச் சொல்லவில்லை.

அரசன் தன் இராஜ்யத்தைப் பகைவர் பாழாக்காமல் தேர் யானை குதிரை காலாட்கள் என்னும் நான்கு படைகளால் காத்துக்கொள்ளுகின்ற விதமே தமயந்தியும் அவளுக்கு இருக்கின்ற அச்சம், நாணம், மடமை பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களின் பெருமையால் தன் பெண்மைக்குத் தீதுவராமல் காத்துக்கொள்கின்றாள். இவைகளில் அச்சம் என்பது செய்யத் தகாதனவற்றைச் செய்வதற்கு அஞ்சுகின்ற குணம். நாணம் என்பது வெட்கம். அயலாரோடு எளிதில் அளவளாவுதற்குக் கூசுகின்ற கூச்சம். மடமை, என்பது கபடு வஞ்சனை முதலியன இல்லாமல், வெளுத்ததெல்லாம் பால், என்று எண்ணுகின்ற மனத்தன்மை. பயிர்ப்பு என்பது நுண்ணிய உணர்ச்சி, (delicate modesty). அற்ப நினைவிற்கும் அற்பச் செய்கைக்கும் உடன்படாது அருவருக்கின்ற உள்ளப் பழக்கத்தினல் உண்டாகின்ற வோர் நுண்ணிய உணர்வு இந்தப் பயிர்ப்பு. இவை நான்கு குணங்களும் இவளிடத்தில் நிறைந்திருப்பதால் தன்னாலேனும் அயலாராலேனும் இவளது கற்புநிலை கெடாமல் காக்கப்படுகின்றது. இனி, அரசருக்கு அமைச்சர் வேண்டும். வெளிநடக்கின்ற விஷயங்களின் உண்மைத் தன்மையை அரசனுக்கு அறிவித்து அதற்கு ஏற்றவாறு அவன் நடந்துகொள்ளும்படி செய்தல் அமைச்சர் தொழில். அவ்வாறே ஐம்பொறிகளும் தமயந்திக்கு' நேர்மையான காரியங்கள் செய்துவைப்பதால் மந்திரிமார்களாகின்றன. அவளது இந்திரியங்கள் கள்வராய் அவள் மனதை அபகரித்துத் தீநெறியுட் சேர்ப்பதில்லை என்பது இதன் கருத்து. அரசு இவள் இன்னவாறு நடாத்தும்போது காலில் கலீர்கலீர் என வொலிக்கும் சிலம்பென்னும் ஆபரணங்களே முரசவாத்தியத்திற்குப் பதிலா யமைகின்றன. மாதர் கண்ணிற்கு உவமையாய் உரைக்கப்படும் பொருள்கள் தாமரை குவளை வண்டு மாவடு மான்விழி போன்ற பல. இனிக் கூரிய பார்வைக்காக வேலையும் வடிவத்திற்காக வாளையும், பெண்கள் கண்களுக்கு உவமை கூறுவர். இவர்களால் பார்க்கப்பட்ட ஆடவர்கள் மனதுள் தைத்துப் பிளக்கின்ற பார்வையாலும் வேலும் வாளும் மாதர் கண்களை நிகர்க்கும். அந்தப்படி அரசனுக்குரிய ஆயுதங்களும் தமயந்திக்குக் கண்களாக இருந்தன. குடையும் உண்டு கொற்ற மன்னவர்க்கு. வெயிலால் வாடியவர் குடைநிழலை அடைந்து துயரம் தீர்வர். அரசனதுகுடை மாந்தர் துயரத்தைத் தீர்ப்பதற்கு அடையாளமாய் அவனது அருளிற்கும் அன்பிற்கும் இருப்பிடமாகும். குளிர்ந்த முகத்தினேடும் பார்ப்பவர்தம் களைதீர்க்கும் தன்மையளாய்த் தமயந்தி இருந்தாள் என்பதற்குக் கவி அவள் முகத்தை வெண்மதிக் குடையாக்கினர். இப்படி அரசிற்கு உரிய அங்கங்களைத் தமயந்தியினிடம் அமைத்துப் பெண்மை என்னும் அரசைஆளவைத்து முடித்ததால்தான் இச்செய்யுள் முற்றுருவக அணி ஆயிற்று.

குறிப்பு:—நாற்படையா நல்லமைச்சா என்பது போன்று வருகின்ற தொடர்கள், நால்+படை+ஆ, நல்+அமைச்சு+ஆ, எனப்பிரியும். கடைசியில் இருக்கின்ற ஆ என்பது ஆக என்பதின் விகாரம். ஆக, என்னும் வினையெச்சத்தின் க கெட்டுப்போய்விட்டது. நால்படை ஆக, முரசு ஆக, கண் ஆக, ஆளுமே என்று முடியும். இந்த ஆக என்பதுதான் ஒவ்வொரு சமயம் ஆய், எனவும் திரிந்து வருவது.

———

22. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு-நாட்டே
னலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

பதப்பிரிவு:—மோடு இளம் கொங்கை முடிய சுமந்து ஏற மாட்டாது இடை என்று வாய் விட்டு நாள் தேன் அலம்பு வார் கோதை அடி இணையில் வீழ்ந்து புலம்பும் ஆம் நூபுரங்கள் பூண்டு.

அன்வயம்:— நூபுரங்கள், நாள்தேன் அலம்பு வார்கோதை அடிஇணையில் வீழ்ந்து பூண்டு, 'இடை, மோட்டு இளம்கொங்கை முடியச்சுமந்து ஏறமாட்டாது" என்று வாய்விட்டுப் புலம்பும்.

கருத்து:—தமயந்திக்கு முலைபெருத்து இடை சிறுத்து இருப்பதால், நடப்பாளாயின் பெருமுலையின் பாரத்தைத் தாங்கமாட்டாது சிறிய இடை உடைந்துவிடும், ஆதலால் நடக்காதே என்று புலம்புவதுபோல், நடக்குந்தோறும் அவள் அணிந்தசிலம்புகள்ஒலிக்கும்.

பதவுரை

நூபுரங்கள் - (அணிந்திருந்த) சிலம்புகள்
நாள் - புதிய
தேன் - தேனுனது
அலம்பு - வழிகின்ற
வார் - நீண்ட
கோதை - பூமாலையை அணிந்த தமயந்தியினது,
அடிஇணையில் - இரண்டு பாதங்களிலும்
வீழ்ந்து - விழுந்து
பூண்டு - (அப்பாதங்களை) பற்றிக்கொண்டு,
இடை - (உனது) இடுப்பானது
மோடு - உயர்ந்த
இளம் - இளமையான
கொங்கை - முலைகளை
முடிய - முற்றிலும்
சுமந்து - சுமந்து
ஏற - கடைத்தேற
மாட்டாது - முடியாது,
என்று - என்று
வாய்விட்டு - வாய்திறந்து
புலம்பும்ஆம்- கதறியழும் என்று சொல்வார்கள்.

விளக்கம்:— புலம்பும் - கதறியழும் (பயனிலை). எது புலம்பும்? நூபுரம் - சிலம்புகள். நூபுரம் என்ன செய்து புலம்பும்? வீழ்ந்து புலம்பும் - விழுந்து புலம்பும். இன்னும் என்ன செய்து புலம்பும்? பூண்டு புலம்பும் - பற்றிக்கொண்டு புலம்பும். எங்கே விழுந்து பற்றிக்கொண்டு புலம்பும்? அடிஇணையில் - இரண்டு பாதங்களிலும். யாருடைய அடியிணையில்? வார்கோதை அடியிணையில்- நீண்ட பூமாலையை அணிந்துள்ள தமயந்தியின் இருபாதங்களிலும். அந்தக் கோதை எப்படிப்பட்டது? அலம்பு வார்கோதை - வழிகின்ற நீண்ட பூமாலை. எது அலம்பு? தேன் அலம்பும். எப்படிப்பட்ட தேன்? நாள் தேன் - புதிய தேன். புதிய தேன் வழிகின்ற பூமாலையை அணிந்த தமயந்தியினுடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து பிடித்துக்கொண்டு சிலம்புகள் என்னவென்று புலம்பும். மாட்டாது என்ன புலம்பும் - முடியாது என்று புலம்பும். என்ன மாட்டாது? ஏறமாட்டாது-கடைத்தேற மாட்டாது. என்ன செய்து கடைத்தேறமாட்டாது? சுமந்து ஏறமாட்டாது. எவ்வளவு காலம் சுமந்து? முடியச் சுமந்து - முற்றிலும் சுமந்து. எது முடியச்

சுமந்து ஏறமாட்டாது என்று நூபுரம் புலம்பும்? இடை - அவளது இடுப்பு. இடுப்பு எதைச் சுமக்க முடியாதாம்? கொங்கை - முலைகளை. எப்படிப்பட்ட கொங்கைகள் அவை? இளம் கொங்கை. இளங் கொங்கை எப்படிப்பட்டவை? மோட்டு இளம் கொங்கை - உயர்ந்த இளமை பொருந்திய கொங்கை.

விரிவுரை.—இடை சிறுத்தும் முலை பெருத்தும் இருப்பது மாதருக்கு இலக்ஷணம். அவ்விரு தன்மையையும் இச்செய்யுள் வர்ணிக்கின்றது. நமக்கு அருமையான ஒருவன் செய்யத்தகாத காரியத்தைச் செய்து தனக்கே தீங்கு தேடிக்கொள்வதைப் பார்க்கச் சகியாது அவன் காலிலும் விழுந்து 'அவ்வாறு செய்யாதே' என்று வேண்டிக்கொள்வதுபோல், சிலம்பு தமயந்தியின் கால்களைப் பிடித்துக்கொண்டு அவள் நடக்கும்போதெல்லாம், 'நடக்காதே, நடக்காதே, நடந்தால் நின் கொங்கையின் பெரும் பாரத்தினால் நுண்ணிய இடை ஒடிந்துபோகும்' என்று வாய்விட்டுக் கதறி வேண்டிக்கொள்கின்றனவாம். ''அம் சிலம்பே வாய்விட்டு அரற்றுவன,' என்று முன் இக்கவி கூறியதை விரித்து இங்கு அவை என்னவென்று அரற்றுகின்றன என்பதைக் காட்டுகின்றார். சிறந்தகவியொருவன் எழுதிய செய்யுளுக்கு வாய்த்தபொருள் எது வென்று எடுத்துக்காட்டவல்லாரும் கவிகளே ஆகின்றனர். அயோத்திமாநகரத்தின் சிறப்பினைப் புகழ்ந்து பாடிய கம்பர்,

" துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்புபூண் டரற்று மாளிகை"

என்று, [உடுக்கைபோன்ற இடையும் பருத்த முலையும் உடைய மயிலின் அழகுவாய்ந்த மாதர்களின் இருபாதங்களிலும் சிலம்புகள் பற்றிக்கொண்டு கதறுகின்ற அரவம் நிறைந்த மாளிகை] - சிலம்பு அரற்றியதைச் சொன்னாரேனும், அவை என்ன சொல்லி எதற்காக அரற்றின என்பதைப் பின் புகழேந்தி இங்குவிளக்கியிருப்பதாலறிகின்றோம். கம்பர்குறிப்பாக விட்டதைப் புகழேந்திஇங்குவிரிவாகக்காட்டியது போலவே, அவர் விரிவாகச் சொல்லியதை இவர் குறிப்பாக உணர்த்துவதும் இனிவரும் சில செய்யுள்களில் அறியலாம்.

இச்செய்யுளில் அமைந்த அணி, தற்குறிப்பு ஏற்ற அணி. இயல்பாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்குக் கவி தன் கருத்தின் குறிப்பை ஏற்றி வேறொரு காரணம் கூறிக் கதையோடும் சேர்த்துக்கொள்கின்ற அழகிற்குத் தற்குறிப்பேற்றவணி என்று பெயர். இயற்கையாய் ஒன்றிற்கு அமைந்த தன்மையை விட்டுவிட்டுக் கவிக்கு அவசியமான குறிப்பை ஏற்றுவதால், அதற்கு அந்தப்பெயர் வந்தது. சிலம்புகள் காலைச் சூழ்ந்திருப்பதும், நடக்கும்போது ஒலிப்பதும் இயற்கை. தமயந்தியின் கொங்கைகள் பெரியன, இடை சிறியது, காலில் அவள் சிலம்புகள் அணிந்திருந்தாள், ஆகிய இவை மூன்றினையும் ஒன்றாய்ச் சேர்த்து முலையின் பாரத்தை இடை தாங்கமாட்டாது என்றுதான் சிலம்புகள் அவள் கால்களைப்பிடித்துக்கொண்டு கதறுவதாகக் கவி தன்னுடைய குறிப்பை ஏற்றி அமைப்பதால் இது தன் குறிப்பு ஏற்ற அணியாகும். தனக்களித்த இருவரத்தை இரக்கமில்லாமல் தசரதன்பால் கேட்டு நின்ற கொடியவள்மேல் கோபங் கொண்டவன்போல் சூரியன் சிவந்து தோன்றினான், என்று கம்பர் கூறுவதும் தற்குறிப்பு ஏற்ற அணியாம். சூரியன் உதயத்தில் சிவந்திருப்பது இயற்கை. எந்நாளும் அவன் சிவந்துதான் தோன்றுவான். எனினும் இந்நாள் அவன் சினத்தினால் சிவந்தான் என்று அக்கவி தன்னுடைய குறிப்பை அச்சூரியன்பால் ஏற்றிவிட்டார். சமஸ்கிருத அலங்கார சாஸ்திரத்தில் இந்தத் தற்குறிப்பேற்ற அணியை, உத்ப்ரேக்ஷாலங்காரம் என்று அழைப்பர். ஆங்கிலத்தில் இருக்கும் Pathetic Fallacy என்னும் Figure of speech இதை ஒருவாறு ஒக்கும்.

# குன்றுடையானும் மக்களும்

[129-வது பக்கத் தொடர்ச்சி]

6. குன்றுடையான் வேளாண்மைசெய்து சீமானானது.

ஐயன் குன்றுடையான் பெரியவீட்டுக் கவுண்டன் கொடுத்த மூன்றங்கண வீட்டுக்குக் குடிபோய் மூன்றுநாட்க ளாயின.

நான்காம் நாள் தாமரை கணவனை நோக்கி, 'உங்களுக்குக் குலதெய்வம் எது?' என்று கேட்டாள்.

'எங்கள் குலதெய்வம் மதுக்கரைச் செல்லாண்டியம்மன்; அது எங்கள் குலத்துக்குக் கைவிளக்கு; கூடப்பேசும் தெய்வம்' என்றான் ஐயன்.

'ஆனால், இது உங்கள் பெரியோர்கள் பிழைத்த ஊராயிற்றே; இங்கே உங்கள் குலதெய்வத்துக்குக் கோவில் உண்டா?' என்றாள் தாமரை.

'ஆ! ஆ! உண்டு. என் தந்தை பூசை திருவிழாக்கள் நடத்தி, அக் கோவிலை அதிகச் சிறப்பாய் வைத்திருந்தார். அவர் காலத்துக்குப் பின் அது பாழடைந்திருக்கலாம்,' என்று குன்றுடையான் சொல்லிக்கொண்டிருக்கையில், கோவிற் பூசாரி சம்புலிங்கப்பண்டாரம் அங்கே வந்து, அவனை வணங்கி, 'சுவாமி, தகப்பனார் காலத்தில் கோவிற் பூசைசெய்த எங்களப்பன் இறந்துபோய் இருபது வருஷங்கள் ஆகின்றன. நானும் சில நாட்கள் அம்மனுக்குக் குறைவு வரக்கூடாதென்று எண்ணி ஒழுங்காகப் பூசை செய்தேன். கோவிலுக்கு வருமானம் இல்லாமையாலும், பூசைச் செலவுக்குக் கொடுப்போர் இல்லாமையாலும் என் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாமையாலும் நான் தினப்பூசையை விட்டு, வாரத்திற் கொருமுறை, எவ்வளவோ பாடுபட்டு வெள்ளிக்கிழமைதோறும் தவறாமற் பூசை செய்கிறேன். தாங்கள் வந்துவிட்டீர்கள். இனி அம்மனுக்குக் குறைவில்லை. அம்மனுக்குக் குறைவில்லையானால் இந்த ஊருக்கும் குறைவில்லை. தாங்கள் இந்த ஊரைவிட்டுப் போனதுமுதல் பூமிகுளிர மழை பெய்ததே இல்லை' என்றான்.

குன்றுடையான், 'நல்லது, பண்டாரம், கோவில் நன்றாக இருக்கிறதா, பாழாய்ப்போயிற்றா? என்றான்.

பூசாரி, 'பூசிவழிப்பா ரில்லை. பலவிடங்களில் சுவர் இடிந்து விழுந்துவிட்டது. கோவிலைச்சுற்றிக்கள்ளிசூழ்ந்துகொண்டது. கூரை சிதைந்து போயிற்று' என்றான்.

இதைக்கேட்ட தாமரை அங்கலாய்த்து, கணவனை நோக்கி, 'எழுந்திருங்கள். நாம் மூவரும் கோவிலுக்குப்போய், கள்ளிமுள்ளெடுத்து, துப்புரவு செய்து, சாமி கும்பிடுவோம். இன்று வெள்ளிக்கிழமை, நல்ல நாள்' என்று சொல்லி, தன் தாயார் கொடுத்த அடிபோன கூடையையும் பிய்ந்த முறத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். கணவனும் பூசாரியும் அவளைத் தொடர்ந்தார்கள்.

கோவிலுக்குப் போய்க் கள்ளியெடுத்து, முள்ளெடுத்து, பெருக்கி, வாசலுக்குச் சாணந்தெளித்து, சுத்தி செய்து, அம்மனுக்கு நீராட்டி, மூன்று காசுக்குச் சூடமும் சாம்பிராணியும் பழமும் வாங்கிவந்து பூசை செய்தார்கள். இதற்குள் மாலைப்பொழுது வந்தது. வானம் இருண்டது. மழைக்காற்று வீசிற்று.

தாமரை, அம்மன் சந்நிதியில் நின்று கும்பிடுகிறாள். 'தாயே, நீ கூடத் துணையிருக்கவேண்டும், குலதெய்வமானுக்கால். நாங்கள் பெற்றோ ருற்றா ரில்லாமல் பிழைப்புக்கு வழியறியாமல், ஏழைகளாய்த் திரிகிறோம். கள்ளங்கப டறியாத என் கணவனைக் காப்பாற்று. தாயே! நாங்களும் நாலுபேர்பார்க்கத் தலையெடுத்துச் சீராக வாழவேண்டும். கடைக்கண்பார், அம்மா! என்குடி உயர்ந்தால் உன் கோவிலில் நித்தப் பூசைக்கு ஏற்பாடு செய்கிறேன்; மண்ணாற் செய்திருக்கும் சுவரைக் கல்லால் செய்கிறேன்; இரும்பாற் செய்திருப்பதை வெள்ளியாற் செய்கிறேன்! தங்கக் கலசம் செய்து வைக்கிறேன்!

கணவனும் மனைவியும் சாமிகும்பிட்டு, அந்திவேளையில் வீடுவந்து சேர்ந்து, சாப்பிட்டுப் படுத்தார்கள். அன்றிரவு நல்ல மழை பொழிந்தது. குன்றுடையான் பொன்வளநாட்டை விடுத்துப் போனபின் அந்தநாட்டில், நல்ல மழை என்பதே யில்லாமல் பஞ்சந்தோன்றி இருந்தது.

மறுநாள்முதல் குன்றுடையான் அவ்வூராருடைய கொல்லைகளில் பாத்தி பிடித்தும், ஏரோட்டியும், கவலையிறைத்தும் கூலிவேலை செய்தான்.

ஐயன் குன்றுடையான் பொன்வள நாட்டில் கால் வைத்ததுமுதல் மாதமும்மாரி பெய்தது. பயிர்பச்சைகள் செழித்து வளர்ந்தன; கன்றுகாலிகள் கதித்தன; குடியானவர்கள் பணக்காரர்கள் ஆனார்கள்; ஏழைகளுக்குக் கூலி யுயர்ந்தது; குன்றுடையானும் மனைவியும் வயிறாரவுண்டு, நாலு காசும் மீத்தார்கள்; அவர்களுடைய ஒற்றைக்கொம்பு மாடும், பொக்கைவா யாடும் தின்று கொழுத்தன.

இப்படியிருக்கும் நாளிலே, வேளாண்மைப் பருவம் வந்தது. விதைப்புக் காலம் தொடங்கியது ஊரார் கம்பும் சோளமும் கொள்ளும் கொண்டுபோய் விதைத்தனர்.

ஒருநா ளிரவு தாமரை கணவனை நோக்கி, 'நமக்கும் காடுகரையிருந்தால், நாமும் விதைக்கலாமே' என்று சொல்லி, நெட்டுயிர்த்தாள். குன்றுடையான், 'அடி போ, பைத்தியகாரி! நீ ஏன் விசனப்படுகிறாய்? நமக்குக் காடுகரை யில்லாமலென்ன? நாளைக்குப் பங்காளிகளிடம் போய்க் கொஞ்சம் பூமி கேட்டு வாங்கிவருகிறேன். நாமும் விதைக்கலாம்'' என்றான்.

தாமரை, 'அவர்கள் நல்லவர்களானால் இத்தனை நாட்களாக உங்கள் நிலங்களை எல்லாம் அநுபவித்துக் கொண்டு இருந்ததை நினைத்து, நீங்கள் கேட்பதற்கு முன்பே கொடுப்பார்கள். அவர்கள் பாவிகள். இருந்தாலும், நீங்கள் போய்க் கேட்பது நல்லதே. நாளைக்குப் போய் வாருங்கள்' என்று சொல்லி, போகிற இடத்தில் தீங்கொன்றும் வராமல் கணவனைக் காக்குமாறு அவள் செல்லாண்டியம்மனைத் துதித்தாள்.

மறுநாட்காலையில் குன்றுடையான் பழையதுண்டு, கம்பளியைத் தோளிற்போட்டுக் கவைக்கோலையூன்றி நடந்து, பாய்ச்சலூருக்குப் போய்ப் பங்காளிகள் வீட்டையடை.ந்தான். கவுண்டர்கள் காடுகரை போயிருந்தார்கள். வாசலிற் படுத்திருந்த நாய் குலைத்து இவனைக் கடிக்கவந்தது. குன்றுடையான் அதனோடு நட்பு வார்த்தைகள் பேசிக்கொண்டே நடந்து, வாசலைக் கடந்து, திண்ணைக்குப்போய், கம்பளியையும் கவைக்கோலையும் வைத்து உட்கார்ந்தான்.

நாய் குலைத்ததைக்கேட்டு நங்கையர்கள் வீட்டிலிருந்து வாசற்படியண்டை வந்து, எட்டிப் பார்த்து, இவ னாரடி இவன்! சொந்தத்தைப் பார்த்தாயா? கேட்காமலே திண்ணையில் குந்திக்கொண்டான்' என்றார்கள். அவர்களிலொருத்தி, 'அவன் வயிற்றைப் பாரடி, தாழி போலிருக்கிறது' என்றாள். மற்றொருத்தி அவன் தலைமயிரைப் பாரடி, தேங்காய்க் குடுமிபோலிருக்கிறது' என்றாள்.

இவ்வாறாக அவர்கள் ஒவ்வொருவரும் அவனுடைய கை, கால், மூக்கு, கண் முதலியவற்றைக் குறித்து ஏளனம் பண்ணிக்கொண்டு நிற்கையில், அவர்களில் இளையாளாகிய காளிங்கராயகவுண்டன் மனைவி அவனைச் சற்று உற்றுநோக்கி, 'அடி, அக்கா, அந்தக்கம்பளியையும் கவைக்கோலையும் பார்த்தாயா? இவன்குன்றுடையான்போல் இருக்கிறான்' என்று கூறினாள். குன்றுடையான் என்ற பெயர் கேட்டவளவில் அவர்களுடைய நெஞ்சுகள் திடுக்கிட்டன. அவர்களிற் சிலர், 'அடியடி, ஆமடி. அந்த நாசமாய்ப்போனவன்தான்' என்றனர்.

அப்பொழுது அவர்களில் மூத்தவள் நேராக வந்து குன்றுடையானைப்பார்த்து, 'யாரப்பா, நீ?' என்றாள். ஐயன், 'என்ன, நங்கை? அடையாளந்தெரியவில்லையா? நான்தான், குன்றுடையாக் கவுண்டன்' என்றான்.

'குன்றுடையாக் கவுண்டனா? அட, இழவே! நீ எங்கிருந்து வருகிறாய்?' என்றாள் மூத்தாள். மற்ற நங்கையர்களும் குன்றுடையானைச் சூழ்ந்துகொண்டு, 'வா, குன்றுடையாக்கவுண்டா! எங்கப்பா போயிருந்தாய், இததனைநாள்?' என்று கேட்டார்கள்.

குன்றுடையான் தான் ஓமந்தூர் போய் எருமை மேய்த்ததுமுதல் வெள்ளிவள நாடு சென்று கலியாணம் செய்துகொண்டு பிறந்தவூர் சேர்ந்ததுவரையில் தன் வரலாற்றை ஆதிமோடந்தமாகச் சொன்னான். அதைக்கேட்டு நங்கையர்கள் மகிழ்ச்சியுற்றவர்கள் போல் நடிதது, 'நல்லது, குன்றுடையாக் கவுண்டா, இரு, போகாதே. கவுண்டர்கள் மத்தியானம் வருவார்கள். நீ அவர்களோடு சாப்பிடலாம்' என்று சொல்லி வீட்டினுள்ளே சென்று, குன்றுடையான் திரும்பி வந்தமைக்குக் கொதிப்புற்று, சமையல்வேலையைப் பார்த்தார்கள்.

இதற்குள் காடுகரை போயிருந்த கவுண்டர்கள் வீடு வந்து சேர்ந்து, கால் முகஞ் சுத்திசெய்து குன்றுடையானை மனைவிமார் இன்னானென்று சொல்ல வறிந்து,

'அடே, தம்பி ! நீ எங்கப்பா போனாய் ? நாங்கள் உன்னைத் தேடாத இடமில்லையே'' என்று பொய் பேசி, அவன் பக்கலில் உட்கார்ந்து, அவன் பாய்ச்சலூரை விட்டுப் போனதுமுதல் நடந்த செய்திகளை யெல்லாம் விசாரித்தார்கள்.

'அண்ணா, நான் ஓமந்தூர் போய் அங்கே பிராமணர்களிடம் பத்துவருஷம் எருமை மேய்த்தேன் ; பின்பு வெள்ளிவளநாடு சென்று மாமனைப் பெண் கேட்டேன். மாமன்மார்கள் கொடுப்பதில்லையென்று இல்லாத இமிசையெல்லாம் பண்ணினார்கள் ; பிறகு மனசு இளகிப் பெண்கொடுத்தார்கள். நான் கலியாணமுடித்துக்கொண்டு மனைவியோடு நாலைந்து நாட்களுக்குமுன் சிற்றலைப் பட்டணத்தை யடைந்து, கூலிவேலை செய்துகொண்டிருந்தேன். நல்ல மழை பெய்ய, எல்லோரும் பூமி உழுது விதைப்பதைப் பார்த்து என் பெண்சாதி, 'நமக்கும் பூமியிருந்தால் நாமும் உழுது விதைக்கலாமே' என்றாள். நான், 'அடி, போ, பைத்தியக்காரி! நமக்குப் பூமியில்லாமலென்ன? என் அண்ணன்மார்களைக் கேட்டுக் கொஞ்சம் பூமி வாங்கி வருகிறேன்' என்று சொல்லி வந்தேன். எனக்கு ஒரு காடு கொடுங்கள், அண்ணா. நானும் உழுது விதைக்கிறேன்' என்றான் குன்றுடையான்.

இதைக் கேட்டதும், குன்றுடையான் பங்குக்கு வந்தானேயென்று பங்காளிகளுக்கு வயிறு எரிந்தது. அவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, 'இவனுக்கு இப்பொழுது காடு கொடுக்காவிடில் நம்மை உலகம் தூற்றும். ஆகையினால் ஒரு மேட்டைக் கைகாட்டுவோம்' என்று பேசி முடிவுசெய்து, குன்றுடையானிடம் வந்து, 'அப்பா, தம்பி, நீ கேட்டபடியே உனக்கு ஒரு காடு கொடுத்தோம்' என்றார்கள்.

பங்காளிகள் கொடுத்த பூமி சிற்றலைப்பட்டணத்து எல்லையிலிருந்த ஒரு கல்லாங்காடு. அக்காட்டில் அறுகம்புல்லும் முளையாது; ஓணானும் முட்டையிடாது; தவளையும் குடியிராது. அதற்கு நாற்புறமும் பாதை; நடுவே ஒரு சொட்டை.

தான் கேட்டஅளவில் பங்காளிகள் காடு கொடுத்தார்களென்று குன்றுடையான்களிப்புற்று, 'அண்ணா, காடு கொடுத்தீர்கள். விதைத் தவசத்துக்கு நான் எங்கே போவேன் ? கொஞ்சம் விதைத் தவசமும் கொடுங்களண்ணா' என்றான்.

'கொஞ்சம் கொள்ளும் சோளமும் கம்பும் கொடுக்கச் சொல்கிறோம்' என்று பங்காளிகள் கூறி, மனைவியரிடஞ் சென்று, 'தீய வறுத்துக் கொடுங்களடி, பயிர் முளைக்காமல் போகட்டும்' என்றார்கள்.

மனைவியர் பொரியோடுவைத்துத் தவசத்தைப் பொன்னிறமாக வறுத்துக்கொண்டுவந்து குன்றுடையான் முன்னிலையில் கொட்டினர்.

குன்றுடையான் தன் கம்பளியை விரித்து, தவசத்தை வாரிப்போட்டு, மூன்று கூறுகளாக முடிந்து தோளின்மேற் போட்டுக்கொண்டு, நான் போய்வருகிறேன்' என்று சொல்லிக் கவைக்கோலைக் கையிற் பற்றி வழிநடந்தான்.

பங்காளிகள் அவனைச் சாப்பிடக் கூப்பிடவில்லை; அவன் வறுத்த தவசத்தை எடுத்துக்கொண்டு நடப்பதைப் பார்த்து, தாங்களும் மனைவியரும் ஏளனஞ் செய்து நகைத்தார்கள்.

சிற்றலைப்பட்டணத்தில் தாமரைநாச்சி, போனகணவன் வரவில்லையேயென்று அவன் வரும் வழிமேல்தன் விழிவைத்து எதிர்பார்த்திருந்து, அவன் மாலையில் வரக்கண்டு எதிர்கொண்டழைத்து, கால்முகங் கழுவ நீர் கொடுத்து, உணவிட்டு உபசரித்தாள்.

பங்காளிகள் உழுவதற்கு நிலமும் விதைப்பதற்குத் தவசமும் கொடுத்து உதவினார்களென்று கணவனும் மனைவியும் மகிழ்ச்சியுற்றார்கள்.

மறுநாள் குன்றுடையான் மனைவியின் சொற்படி பெரியவீட்டுக் கவுண்டனிடஞ் சென்று, ஒரு கலப்பையும், கயிறும், தன்னுடைய ஒற்றைக்கொம்பு மாட்டிற்குச் சோடியாக மற்றோர் எருதும் கேட்டு வாங்கி வந்து, புதுக் கும்பத்தில் கம்பை நிறைத்து, பிள்ளையார் கோவிலுக்குப்போய்ப் பூசைசெய்து சாமிகும்பிட்டு ஏர் பூட்டிக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய் வடக்குமுகமாய் நிறுத்தி, ஏழைகளுக்குத் தானம் கொடுக்கும்பொருட்டுக் காத்திருந்தான். தானத்தைப் பெறுவதற்கு ஒருவரும் வாராமையால் குன்றுடையான் அங்கே நிழலில் சிறிதுநேரம் உட்கார்ந்திருக்கையில், அவ்வழியே ஒரு பரதேசி வர, அவனைக் கண்டு அழைத்துப் பாதிக் கம்பைக் கொட்டிக்கொடுத்தான். அந்தப் பரதேசி களிப்புற்று, 'கம்பு நன்றாக விளையவேண்டும்' என்று வாழ்த்தி, ஏருக்கு முன்னே ஒருபிடி கம்பை இறைத்து விட்டுப் போனான். ஏருழுவதில் போதிய பயிற்சி யில்லாத குன்றுடையான் உழவுகோலைத் தோள்மேல் போட்டுக்கொண்டு, ஏருக்குப் பின்னே நடந்து உச்சிவேளையாகுமளவும் ஒன்றிரண்டாக உழுது விதைத்தான். அப்பொழுது மனைவி கணவனுக்குச் சோறு கொண்டுவருதலும், அவன் ஏரைவிட்டு வந்து கால் முகங் கழுவி, திருநீறணிந்து சோறுண்டான். கணவன் உழுவதையும் விதைத்ததையுங்கண்டு மனைவி அகமகிழ்ந்து, கொள்ளு ஓர் அணைப்பு விதைக்கும்படி சொல்லிப் போயினள்.

அடுத்தநாள் குன்றுடையான் காட்டுக்குச் சோளங் கொண்டுபோய், முந்தியநாள் போலவே ஏர்பூட்டி வடக்கு முகமாய் நிறுத்தி, ஏழை பரதேசிகளை எதிர்பார்த்துநிற்கையில், பட்டைநாமந்தரித்த ஒரு தாசரி அங்கு வந்துசேர்ந்தான். கொண்டுவந்த சோளத்திற் பாதியைக் குன்றுடையான் அவனுக்குக் கொட்டிக் கொடுத்தான். அவன் வாழ்த்தி ஒரு பிடி சோளத்தை இறைத்துவிட்டுப் போனபின், ஐயன் மத்தியானமாகுமட்டும் ஏருழுது சோளம் விதைத்தான். மனைவி சோறுகொண்டு வந்தாள். கணவன்சோறுண்டு, ஏரை ஓட்டிக்கொண்டு மனைவியுடன் வீட்டுக்குத் திரும்பிப் போயினன்.

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[135-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 2. களம் 1.

நூல்

[லூஸியஸ் மறுபடி வருகின்றான்]

லூஸியஸ்:—கதவண்டை இருப்பது உன் மைத்துனன் காஸ்ஸியஸ்; உன்னைப் பார்க்க விழைகின்றனவன். (1)

ப்ரூட்டஸ்:—தனியே யிருக்கின்றானோ?

லூஸி:—இல்லை, ஐய, அவனோடு அதிகமானபேர் இருக்கின்றனர்.

ப்ரூ:—அவர்களை நீ அறிவாயோ?

லூஸி:—அறியேன், ஐய; அவர் பாகைகள் செவி வரைப் பறிக்கப்பெற்றும், முகங்களிற் பாதி கஞ்சுகங்களிற் புதைந்து மிருக்கின்றன. ஆதலின், சாடையின் எவ்வடையாளத்தினாலும் அவர்களைத் தெரிந்துகொள்ள இயலவேயில்லை. (2)

ப்ரூ:—அவர்களை வரச்சொல்.

[லூஸியஸ் போகின்றான்]

நம் குழுவின ரவர் (3) ஓ சதியே, தீமைகள் மிகத் திரியும் இரவினுமே உன் அரந்தைசெய் புருவத்தைக் காட்டுதற்கு உட்குகின்றனையோ? (4) ஓஹோ! எனின், பகலிலே உன் அஞ்சவரு முருவத்தினை மறைப்பதற்குரிய இருண்டதோர் குகையினை எவ்வயின் காண்பாய்? (5) சதியே, யாதுந் தேடற்க (6); புன்சிரிப்பிலும் மென்மொழியிலும் அதனை ஒளித்துவிடு (7). அன்றேல், உன் சுயச் சாடையே சுமந்து நடமாடுவாயாயின், நின்னைத் தெரியாவகைக் கரந்திருக்க நிரயமும் வேண்டளவு மங்கிய தில்லையே. (8)

[காஸ்ஸியஸ், காஸ்க்கா, டெஸியஸ்ப்ரூட்டஸ், ஸின்னா, மெட்டெல்லஸ் ஸிம்பர், ட்ரெபோனியஸ், வருகின்றனர்]

காஸ்ஸியஸ்:—உன் அமைதியின்மீது யாம் தகவு கடந்து துணிகின்றோம் என நினைக்கின்றேன். வந்தன முனக்கு ப்ரூடஸ். நாங்க ளுன்னைத் தொந்தரவு செய்கின்றோமோ?

ப்ரூட்டஸ்:—நான் எழுந்து ஒருமணிநேர மாயிற்று; இரவு முழுவதும் விழித்திருந்தேன். உன்னுடன் வருகின்ற இவர்களை யான் அறிவேனோ?

காஸ்ஸியஸ்:—ஆம், அவர்களில் ஒவ்வொருவனையும்; உன்னை மாண்புற மதிப்பதல்லா லயலொருவன் ஈங்கில்லை; உரோமப் பெருமகன் ஒவ்வொருவனும் உன்பால் பூண்டுள உயரியதோ ரெண்ணத்தை நீயே உன்னைப்பற்றிக் கொண்டிருந்தா லாகாதா என்றிவர்களில் ஒவ்வொருவனும் விரும்புகின்றவன். இது, ட்ரெபோனியஸ்.

ப்ரூட்டஸ்.—அவனிங்கு நன்று வருக.

காஸ்ஸியஸ்:—இது, டெஸியஸ் ப்ரூட்டஸ்.

ப்ரூடஸ்:—அவனும் நன்று வருக.

காஸ்ஸி:—இது காஸ்க்கா; இது ஸின்னா; இது மெட்டெல்லஸ் ஸிம்பர்.

குறிப்பு

(1) ப்ரூடஸின் சகோதரி ஜூனியா என்பவளைக் காஸ்ஸியஸ் மணந்திருந்தான்.

(2) குல்லாய்களைக் காதளவு இழுத்துக்கொண்டும் அங்கிகளைக் கழுத்திற்குமேல் உயர்த்திக்கொண்டு மிருப்பதால் வந்திருப்பவர் இன்னாரென்று அடையாளம் தெரியவில்லை, என்கின்றான் லூஸியஸ். கஞ்சுகம் = அங்கி.

(3) இப்படி உருவம்கரந்து வந்திருப்பதால் அவர் சதியாலோசனைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று ப்ரூட்டஸ் நிச்சயம் செய்கின்றான்.

(4) சதி = வஞ்சனையால் கெடுப்பது. சதியை, உருவகப்படுத்திச் 'சதியே' என ப்ரூட்டஸ் அழைக்கின்றான். சதியே, என்பது தொழிலாகுபெயராய், இங்குச் சதியாலோசனைக் காரர்களைக் குறிக்கின்றது. சதியாலோசனையின் தன்மையையும் அதனை நடத்தும் சூழ்ச்சிகளையும் பற்றிப் ப்ரூடஸ் கூறும் இது அவனுடைய குணத்தின் உண்மையைத் தெரிவிக்கும்வகையில் மிகவும் முக்கியமாய் நிற்கின்றது. இதன் கருத்துப் பின்வருமாறு:—கொலை கொள்ளை விபசாரம் முதலிய தீய காரியங்களெல்லாம் அதிகமாய் நடைபெறும் இரவிலேகூட இச்சதியாளர் தம் முகத்தைத் தெரியக்காட்ட நாணுகின்றார்களென்றால், இதனுடைய பாதகம் எத்துணை இழியதாக இருக்கவேண்டும் என்று முதலில் சதியை இழித்துப் பரிகசிக்கின்றான். ஆதலால் தான் செய்ய இருக்கும் கருமத்தின் இழிவையும் கயமையையும் ப்ரூடஸ் நன்குதேர்ந்தவன் என்பதுவெளிப்படை. அரந்தைசெய் புருவத்தைக் காட்டுதற்கு உட்குகின்றனையோ = மற்றவர்க்குத் துன்பம் விளைவிக்கும் உன்முகத்தை, மறைக்காமல் வெளிக்காட்டக் கூசுகின்றனையோ. அரந்தை = துன்பம். புருவம் = சினை ஆகுபெயராய் இங்கு முகத்தைக் குறிக்கின்றது.

(5) இரவிலேயே சதியாளர் தம்மை இவ்வளவு மறைத்துக்கொள்ள வேண்டுவோர்களாயின் பகலில் எங்குத்தான் சென்று ஒளிந்துகொள்வார்கள். எவ்வளவு இருண்ட குகையில்போய்ப் பதுங்கினும் அதனையுங் கடந்துஅவர் முகத்தின் குரூரம் தென்பட்டேதீரும்.

(6) ஆதலால், முகத்தை மூடிக்கொள்வதாலும் இருட்டிடந்தேடி ஒளிவதாலும் பயனில்லை.

(7) ஆகையால், கபடமாய் நடிக்கக் கற்றுக்கொள். புன்சிரிப்புச் சிரித்தும் மென்மொழிகள் பேசியுமே மற்றவர் குடியைக் கெடுக்கவேண்டும்.

(8) அவ்வாறின்றி, மனத்திலுள்ள குரூரத்தை முகத்திலுந் தாங்கினராவாரெனில் பிறகு அம்முகத்தினை மூடிக்கொண்டாலுமென்னபயன்? நரகத்தின் இருளிலும்கரந்திருக்கமுடியாது. கருமம் வெளிப்பட்டு இடையூறு எய்தும்.

இவ்வளவு துரோகமும் நயவஞ்சனையும் சூழவல்ல ப்ரூடஸை என்னவென்று மதிப்பது! இவன் மகா உத்தமனென்றும், எண்ணம் தூயது என்றும், உண்மையாளன் என்றும், மற்றுத் தன் தேசத்தின் விடுதலையின்பாலுள்ள ஆர்வத்தால் மதிமயங்கிச் செய்கை திகைத்துக் காஸ்ஸியஸின் தந்திரத்திற்கு இரையாகி இக் கொடிய காரியத்திற்கு உடன்பட்டானென்றும், ஷேக்ஸ்பியர் நூலாராய்ச்சியுடைய ஆங்கிலஅறிஞரெல்லாரும் ஒருவாயாய் உரைக்குமது, ப்ரூடஸின் இவ்வாசகங்களால் மறுக்கப்பெறுகின்றது. இதுவன்றி, அவர்களுடைய நன்மதிப்பிற்கு ஆதாரமில்லை என்பதை நிலைநிறுத்த இன்னும் சிலகுறிப்புக்கள் பின்னரும் வரும்.

ப்ரூடஸ்:—அவ ரனைவரும் நன்று வருக. உங்கள் கண்களுக்கும் இரவிற்கும் இடையே கிடக்கும்படி கவனம்மிகு கவலைகள் யாவையே ? (9)

காஸ்ஸியஸ்:—உன்னோடு ஒருவார்த்தை யான்வேண்டலாமோ ? (10)

[ப்ரூடஸும் காஸ்வியஸும் தனியாகச் சென்று மெல்லப் பேசிக்கொள்கின்றனர்]

டேஸியஸ் ப்ரூடஸ்:—இங்கே கிடக்கின்றது கிழக்கு. பொழுது இங்கேயன்றோ விடிகின்றது.

காஸ்க்கா :—இல்லை.

ஸின்னு:—ஓ, மன்னிக்கவேண்டும் ஐய, அங்குத்தான்; முகில்களை உருவுகின்ற அதோ அப் புகர்நிறக் கோடுகள் பகலின் வரவுரைக்குந் தூதர்களே.

காஸ்க்கா:—இருவரும் மயங்கினீரென்று நீங்களேஒவ்வுவீர். இங்கே, என் கத்தியைக் காட்டுமிடத்தில், சூரியன் உதிக்கின்றது. வருடத்தின் இள இருது இதுவென்பதைப் பொறுத்து அது தென்திசையில் நெடுவழி படர்ந்திருக்கின்றது. இரண்டு மாதங்களுக்கப்பால், வடதிசைமே லருகாகித் தன் தீயினை முதலில் தோற்றுவிக்கும். நடுக்கிழக்கு நிற்பதோ, சபை மண்டபம்போல், நேரே இங்கு. (11)

ப்ரூடஸ்:—ஒவ்வொருவராக எல்லோரும் உங்கள் கைகளைக் கொடுங்கள். (12)

காஸ்ஸியஸ்:—நாம் எண்ணித்துணிந்திருப்பதைஆணை வைத்தும் நிச்சயம்செய்வோம்.

ப்ரூடஸ்:—வேண்டா, (13)ஆணையால் அதுவேண்டா. மாந்தர்முகங்களும்,நம் ஆன்மாவின் துன்பங்களும், இக் காலத்தின் கொடுமையும், இவைதாம் இயக்கலாற்று நொய்ய நோக்கங்களாயின் இப்பொழுதே கலைந்தகன்று ஒவ்வொருவனும் தன் மிடியுடைய படுக்கையைச் சேரட்டும் (14). பின் எல்லோரும் சீட்டின்படி ஒவ்வொருவனும் விழுகின்றவரையில் அண்ணுந்த பார்வைக் கொடுங்கோன்மை திரியட்டும் (15). மற்று,கோழைமக்களைச் சுடர ஏற்றவும் உருகுகின்ற பெண்களின் உணர்வுகளை வீரத்தால் துவைத்து எஃகெனச்செய்யவும், போதிய அனல், யான் நிச்சயமாய்க் கருதும்வண்ணம், இவைகள் தாம் தாங்குமெனில், என் சுயதேசவாசிகாள், பின்னர், நாம் கைக்கொண்ட நோக்கமன்றி, அல்லலைத் தீர்க்குமாறு நம்மைத் தைத்துத் தூண்டுதற்கு வேறோர் முள்ளும் வேண்டுமோ? (16) சொல்லொன்று வழங்கிப் பிறகு பின்னிடா இரகசிய உரோமர்கள் என்பதல்லால் வேறோர் பிணையும் நம்மிடை வேண்டுமோ! (17). இவ்வாறு ஆகுக, அன்றேல் அதன் பொருட்டு யாம்வீழ்கின்றோம் என்று, சீலமுடைய உண்மையும் உண்மையும் செய்துகொண்ட உடன்படிக்கை யல்லாமல் வேறோர் ஆணையும் வேண்டுமோ ? புரோகிதர்களும், கோழைகளும், பதுங்கிக்கிடக்கும் பயங்கொள்ளிகளும், தொய்ந்து போன கிழப்பிணங்களும், தீமைகளை விரும்பி ஏற்றுப் பொறுத்திருக்கின்ற கீழான சன்மங்களும் ஆணைவைக்கட்டும், சந்தேகத்திற் கிடமான பிராணிகளைக் கெட்டகாரியங்களுக்கு ஆணையிடச் சொல். வழங்கிய வாக்குறுதியின் சிறிதினும் சிறியவோர் அணுவேனும் சிதைப்பானுயின், உரோமர்களில்ஒவ்

(9) இரவாயிருந்தும் நீங்கள் தூங்காமல் இங்கு வருவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டதோ, என்பது பொருள்.

(10) தன்னுடன் வந்தவர்களை ப்ரூடஸிற்குத் தெரிவித்தபின், காஸ்ஸியஸ் அவனோடு ஒருபுறஞ் சென்று ஏதோ இரகசியம் பேசுகின்றான்—ஒரு கட்சிக்குள்ளேயே, வேறு வேறு இரகசியங்கள் இல்லாமல் தீராதன்றே. அது இயற்கையே என்று மற்றவர்களும் சினங்கொள்ளாததுமன்றி, அந்த இரகசியத்தைத் தாங்கள் செவிகொடுத்துக் கேட்கவில்லை என்பதைத் தெரிவிக்க, சூரியன் உதிக்கும் இடம் எதுவென்று தேர்வதில் தம் கவனத்தைச்செலுத்தி வாதிக்கலாகின்றனர்.

(11) நேர் கிழக்கு ஒருபுற மிருக்கச் சூரியன் வேறோர் புறம் உதிக்கின்றதே, என்பதைப்பற்றி இம்மூவருக்கும் நிகழ்ந்த வழக்கு இது. காலத்திற்கேற்றபடி சூரியன் உதிக்கின்ற இடத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர்களும், மற்றவர் சொல்வதை ஏற்றுக்கொள்ள மாட்டாதவர்களும் ஆகிய இவர்கள், ஸீஸரைக் கொல்வதுமாத்திரம் அவசியமென்ற நிச்சயங்கொண்டு எல்லாரும் ஒருமனப்படுகின்றனர் —என்னே மாநுட இயற்கை, என்னே அரசியல் திருத்தக்கட்சிகள், என்று ஷேக்ஸ்பியர் பரிகசிக்கின்றார்.

(12) இதுவரையில், கட்சியைக் கூட்டிவிட்ட காஸ்ஸியஸ் ப்ரூடஸிற்கு அதன் தலைமையை அளித்துத் தான் இரண்டா மிடத்திற்குச் செல்லவே, தலைவனுன ப்ரூடஸ், மற்றவர்களுடன் கைகுலுக்கி அவ்வுறவினை உறுதிசெய்துகொள்கின்றான்.

(13) தான் தலைவனானதற்குத் தக்க அடையாளம் என்னவென்றால், முதல்முதலாக,ஒருவன் ஒன்று சொன்னால் அதற்கு மாறாகத் தான் வேறொன்று சொல்லி மறுக்க வேண்டுமென்பதுபோல் நிற்கின்றது இது. தன்னுடைய கட்சிக்குள்ளேயே காஸ்ஸியஸ்,ப்ரூடஸின் கையில் அடைந்த முதல் தோல்வி இது. இனி மறுத்ததற்குக் காரணங்கள் கற்பிக்கின்றான் ப்ரூடஸ். "நாமும் கெட்டவர்களாய், நாம் கைக்கொண்ட கருமமும் கெட்டதா யிருந்தாலல்லவோ, நம்முடைய உடன்படிக்கையை ஆணைவைத்து உறுதிசெய்ய வேண்டும்—இப்பொழுது ஆணையொன்றும் வைக்க அவசிய மில்லை"—என்பது அக்காரணங்களின் பிண்டப்பொருள்.

(14) ஸீஸர் செய்கின்ற துன்பங்களால் வாடிய சனங்களின் முகங்களும், அவைகளைக்கண்டு ஆற்றாது தவிக்கும் நம்முடைய ஆன்மாக்களும், இக் காலத்தின் கொடுமைகளும் நம்மை இச்செய்கைக்குத் தூண்டப் போதாவாயின், ஆணைவைத்து என்னபயன்? மிடி-சோம்பல். மிடியுடைய படுக்கை, என்பது மாற்றடைமொழி. சோம்பேறிகளே, இப்பொழுதே படுக்கப்போங்கள் என்பது பொருள்.

(15) அண்ணுந்த பார்வைக் கொடுங்கோன்மை என்பது,பேராசை பிடித்துத் தலைவிரித்தாடுகின்ற கொடியோனுகிய ஸீஸர், எனப் பொருள்படும். நம்மெல்லோரையும் அவன் ஒவ்வொருவராய்க் கொன்று தீர்க்கப்போவது நிச்சயம். அதுவும் எப்படி. இன்றைக்கு யாரைக் கொல்லலாம்,இன்றைக்கு யாரைக்கொல்லலாம் என்றுநாடோறும் சீட்டுப் போட்டுப்பார்த்து யார் பேர் வருகின்றதோ அவனைக் கொல்வானேயன்றி ஒருகுற்றத்தைக் காரணமாகக் காட்டவாவது வேண்டும் என்றுகூட நினைக்கமாட்டான்.

(16) பேசும் விரைவினுலும் படபடப்பாலும் ப்ரூடஸ், இருவேறு உருவகங்களை ஒன்றாகக் கலக்கின்றான். மாந்தர்முகம், தம் ஆன்மாவின் துயரம், காலத்தின் கொடுமை ஆகிய இக்காரணங்கள் ஒருங்குசேர்ந்து முதலில் நெருப்பிற்கு நிராக உருவகம் செய்யப்பெற்றன. அந்நெருப்புத் தான், மழுங்கிய கோழைகளுக்குங்கூட ஊக்கமும், இளகிய மனங்களுக்குத் துவையலிட்டு எஃகாகிய இரும்பின் திண்மையும் அளித்து நிற்க வேறோர் ஆணை எற்றுக்கு என்கின்றான். பிறகு,தம்மைக் குதிரைகளாகவும், குதிரைகளின் விலாவில் குத்தி ஓட்டுதற்கு அணியும் கால்முள்களாக (Spurs) அந் நோக்கம் முதலியவைகளையும் உருவகஞ் செய்கின்றான்.

(17) பிணை = கட்டுப்பாடு. சொன்ன சொல்லையும் தம் இரகசியங்களையும் காப்பதே இயற்கையாக உடைய உரோமர்களுக்கு ஆணை என்று ஒன்று தனியே வைப்பது எற்றுக்கு—என்பது பொருள்.

வொருவனும் பெருமையுடன் சுமக்கின்ற உதிரத் துளிகள் ஒவ்வொன்றும் தனித்தனி பல சோரத் தால்சுரந்த குற்றத்திற்குள்ளாகுமிப்பொழுது (18), நம்முடைய கருத்தேனும் கருமமேனும் ஆணையொன்றிட்டுறுதிசெய்யல் அவசியமென் றெண்ணி, யாம் துணிந்துள இம் முயற்சியின் உண்மைப்பெருமைக்கோர் மாசு நீ பூசவேண்டா. (19)

காஸ்ஸியஸ்:-இனி, ஸிஸிரோவின் செய்தி யென்ன? அவனை யாம் ஆழம்பார்க்கலாமோ? நம்முடனவன் உறுதியாய் நிற்பானென நினைக்கின்றேன். (20)

காஸ்க்கா:—அவனை நாம் விட்டுவிடவேண்டா.

ஸின்னு:—வேண்டா, வேண்டாவே வேண்டா.

மெட்டெல்லஸ்:—ஆமாம்; அவனை வைத்துக்கொள்வோம்; நமக்கோர் நன்மதிப்பும், நம் செய்கைகளைப் போற்றுதற்கு சனங்கள் குரல்களையும் அவனது வெள்ளிமயிர்கள் நமக்கு வாங்கித்தரும் (21). அவனுடைய அறிவே நம்முடைய கைகளை ஆண்டதென்று சொல்வதாகுக. நம் இளமையும் முரட்டுத்தனமும் எள்ளளவும் தென்படாமல் எல்லாம் அவன் கண்ணியத்தினுள் புதைந்துவிடட்டும் (22).

ப்ரூடஸ்:—ஏ, ஏ! அவன் பேர் சொல்லற்க. அவன்பால் நாமிதனை விள்ளவேண்டா. ஏனெனில், மற்றவர் துவக்கிய எதனையும் அவன்தான் ஒருபோதுந் தொடர்ந்துவர மாட்டான். (23)

காஸ்ஸியஸ்:—எனின், அவனை விட்டுவிடு.

காஸ்க்கா:—ஆம் ஆம்! அவன் தகுந்தவனல்லன் (24).

(18) ஆணையிடலாகாதென்று தடுக்கின்றானாயினும் ப்ரூடஸ—ம் ஒரு கொடிய சூள் உரைக்கின்றான். சோரம்-விபசாரம். இந்தக் காரியத்தில் ஒருவன் வாக்குப் பிறழ்வானானால் அவன் ஒரு தகப்பனுக்குப் பிறந்தவனல்லன், என்பது பொருள்.

(19) இப்படி எல்லாம் இருக்க, ஆணையிட்டுத்தான் நம்முடைய உறுதியைக் காத்தல் கூடும் என்று நீ எண்ணுவதும் நம் பெருமைக்கும் தூய்மைக்கும் வாய்மைக்கும் இழுக்கன்றோ—ஆதலின் அதனை விடுக, என்கின்றான்.

(20) ஆணையிடலாகாதென்று தீர்ந்தபின். ஸிஸிரோவையும் தம் கட்சியில் சேர்த்துக்கொள்ளலாமா, என்பதைப்பற்றி ஆலோசிக்கின்றனர்.

(21) ஸிஸிரோ, பெரிய மனிதன், வயது சென்றவன், செனட் சபையினர்களில் ஒருவன், ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றவன், ஒரு விடயத்தை எடுத்துப் பேசி மற்றவர்களைத் தன்கருத்திற்கு இணங்கும்படி செய்கின்ற நாவன்மை அதிகம் உடையவன். அவன் நம் கட்சியிலிருந்தால், நம்முடைய செய்கை சனங்களுக்குச் சம்மதமாகும், என்பது பொருள்.

(22) ஸிஸிரோ இதற்கு உடன்பட்டு உதவி செய்தானென்றால் நம்முடைய காரியத்தின் தீமை தோன்றாது என்பது பொருள்.

(23) இது காஸ்ஸியஸின் இரண்டாவது தோல்வி. கட்சியின் தலைவனாவதற்குத் தன்னுடன் ஸிஸிரோ போட்டி கொள்வான் என்பதே, ப்ரூடஸ் அவனைச் சேர்த்துக்கொள்ளாததற்குக் காரணம்.

(24) ஸீஸரின் வாய்பார்த்துத் தாம் என் கிடக்கவேண்டும் என்று அவனைக் கொல்லத்தலைப் பட்டவர் இதற்குள்ளேயே ப்ரூடஸிற்குப் பின்பாட்டுப் பாடவேண்டி நேர்கின்றது.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[136-வது பக்கத் தொடர்ச்சி]

### (X) பிரமாணத்தின் வகுப்புக்கள்

பிரத்தியட்சம் நால்வகையென்பது சைவர் துணிவு. அவையாவன (1) இந்திரியப் பிரத்தியட்சம் (2) மானதப் பிரத்தியட்சம் (3) சுயவேதனைப் பிரத்தியட்சம் (4) யோகப் பிரத்தியட்சம் என்பனவாம். அவை இச் செய்யுட்களில் அழகாய் விளக்கப்பட்டமைகாண்க:—

உயிரினோ டுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக்காட்சி;
அயர்விலிந் திரிய ஞான மைம்புலன் சார்ந்துயிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்ட லாமே ·

அருந்தின்பத் துன்ப முள்ளத்
தறிவினுக் கராக மாதி
தருந்தன்வே தனையாங் காட்சி,
சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால
வியல்பகல் பொருள்க ளெல்லாம்
இருந்துணர் கின்ற ஞானம்
யோகநற் காண்ட லாமே

சிவஞான சித்தியார் -

இந்நால்வகைப் பிரத்தியட்சப் பிரமாணங்களை அப்பர்தேவாரத்திருப்பதிகங்களில்விளக்குமுறைகாண்க:-

(1) இந்திரியக் காட்சி:—

பாளை யுடைக்கமு கோங்கிப்பன்
மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயற் றில்லைதன்னு
ளாள வுடைக்கழற் சிற்றம்
பலத்தர னாடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
போய்த்தொண்டர் காண்ப தென்னே.

கோயில் திருவிருத்தம் 1.

(2) மானதக் காட்சி

சித்தத் தெழுந்த செழுங்கம லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மாற்றினிக் காண்ப
[தென்னே ?

கோயில் திருவிருத்தம் 9.

(3) சுயவேதனைக் காட்சி

நாதனா ரென்ன நாளு நடுங்கின ராகிற் றங்க
ளேதங்களறிய மாட்டா ரிணையடி தொழுதேமென்பா
ராதனா னவனென் றெள்கி யதிகைவீ ரட்டனேநின்
பாதனன் பாவா துய்க்கும் பழவினைப்பரிசி லேனே

திருவதிகை வீரட்டானம்—திருநேரிசை 3.

(4) யோகநற்காட்சி

ஊனினுள் ளுயிரை வாட்டி
யுணர்வினர்க் கோளிய ராகி
வானினுள் வான வர்க்கு
மறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னு
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மாவர்
திருச்செம்பொன் பள்ளி யாரே.

திருச்செம்பொன்பள்ளி—திருநேரிசை 1.

(ii) காணப்படுவனவற்றின் அறுவகைச் சம்பந்தம்

பொருள் இந்திரியங்களுடைய சாட்சாத்காரிப் பிரமைக்கு ஏதுவாகிய சந்நிகர்ஷம் அறுவகை என்பர் தருக்க நூலார். அவையாவன:—

(1) சையோகம்.

இது ஒருமைப்பட்டுப் பொருந்தலாம்; இதனால் திரவியப் பிரத்தியட்சமாகும்.

படமுடை யரவினோடு பனிமதி யதனைச்சூடிக்
கடமுடை யுரிவைபோர்த்துக் கண்டவ ரஞ்சவம்ம
விடமுடைக் கச்சி தன்னு ளேகம்ப மேவினான்றன்
நடமுடை யாடல் காண ஞாலந்தா னுய்ந்தவாறே

திருவேகம்பம் - திருநேரிசை - 8.

(2) சையுக்த சமவாயம்.

இச் சம்பந்தத்தால் திரவியத்தின் சாதி, சப்தம் ஒழிந்த குணங்கள், கருமங்கள் இவை பிரத்தியட்சமாம்.

தருக்கு மிகுத்துத் தன்றோள்
வலியுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப
மலைமகள் கோன்சிரித்து
வரக்கன் மணிமுடி பத்து
மணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே.

கோயில் திருவிருத்தம் 10

(3) சையுக்த சமவேத சமவாயம்.

இது ஒருவகைச் சையுக்த சமவாயமே. முற்கூறிய சையுக்த சமவாயத்தில், திரவியத்தின் குணத்திலுள்ள சாதி தொழில் இவைகள் இச் சையோக சம்பந்தத்தால் நேருமென்பர். பொருள் வேறாயும், குணங்கள் வேறாயும் பிரித்து அறியுங்காலையில் இது நேரும். இதிலும் சப்த மொழிந்த குணங்களும் கருமங்களுமே பிரத்தியட்சமாம். இவற்றை அப்பர் பாசுரத்தால் சிறிது விளக்க முயலுவோம் :—

ஒருவரு நிகரில்லாத வொண்டிற லரக்க னோடிப்
பெருவரையெடுத்ததிண்டோள் பிறங்கியமுடிகளிற்று
மருவியெம் பெருமானென்ன மலரடி மெள்ளவாங்கித்
திருவருள்செய்தார் சேறைச்செந்நெறிச் செல்வனாரே.

திருச்சேறை - திருநேரிசை 10.

(4) சமவாயம்

ஓசை கிரகிப்பதாகிய சம்பந்தம் இதுவாகும். இதில் செவிஇந்திரியம்,ஓசையேபொருள். இச்சம்பந்தம்குணி குணசம்பந்த மென்பாருமுளர். செவி குணியும் ஓசை குணமுமாம். (உ—ம்)

தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலா லூன்ற மணிமுடி நெரிய வாயாற்
கன்னலின் கீதம் பாடக் கேட்டவர் காஞ்சிதன்னுள்
இன்னவற் கருளிச் செய்தா ரிலங்குமேற் றளியனாரே.

திருக்காஞ்சி திருமேற்றளி—திருநேரிசை 10.

(5) சமவேத சமவாயம்

இச் சம்பந்தத்தால் சப்தத்திலுள்ள சாதி பிரத்தியட்சமாகும் :—

வேதங்க ளன்குங்கொண்டு விண்ணவர் பரவியேத்தப்
பூதங்கள் பாடியாட லுடையவன் புனித னெந்தை
பாதங்கள் பரவி நின்ற பத்தர்க டங்கண் மேலை
யேதங்க டீர நின்றா ரிடைமரு திடங்கொண் டாரே.

(திருவிடை மருது-திருநேரிசை-5)

(6) விசேடண விசேடிய பாவம்

இச்சம்பந்தத்தால் அபாவ சமவாயங்களின் உணர்ச்சி பிரத்தியட்சமாம். இதை அப்பர் திருவையாறு—பண்—திருநேரிசை யென்னும் திருப்பதிகத்தில் வெகு விநோதமாய்ப் பாடியிருப்பது காண்க. இதில் ஒவ்வொரு அடியின் இடையிலும், சில அடிகளின் அந்தங்களிலும் இடைநிலைத் தீபகமாகச் சொற்களை அமைத்துப் பாடுவதைக் கவனிக்க:—

தானலா துலக மில்லை—சகமலா தடிமை யில்லை
கானலா தாட லில்லை கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லை வார்குழன் மங்கை யோடு
மானலா தூர்வ தில்லை யையனை யாற னார்க்கே.

கேளலா துடையு மில்லைக்கிளர்பொறி யரவப்பைம்பூண்
டோளலாற் றுணையு மில்லைத் தொத்தலர் கின்ற வேனில்
வேளலாற் காயப் பட்ட வீரரு மில்லை மீளா
ஆளலாற் கைம்மா றில்லை யையனை யாற னார்க்கே.

(திருவையாறு பண்-திருநேரிசை)

இவ்வாறு பிரத்தியட்சப் பிரமாணமானது பிரத்தியட்ச ஞானசம்பந்தமாய் மூவகைக் காரணங்களையும் அறுவகைச் சம்பந்தங்களையும் பெறும். இதன்றியும் இது சாமான்ய லட்சணத்துடன் நிற்காது ஞான லட்சணத்துடனும், யோகத்தால் உண்டாகும் ஒருவகைத் தருமலட்சணமும் பெறும்.

ஈச னீசனென் றென்று மரற்றுவன்
ஈசன் றானென் மனத்திற் பிரிவிலன்
ஈசன் றன்னையு மென்மனத் துக்கொண்டு
வீசன் றன்னையும் யான்மறக் கிற்பனே.

மறக்கிற்பனே யென்னும் - திருக்குறுந்தொகை 3.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—3. அகத்தியப் படலம்.

[137-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பராற் பெருமை யெய்தத்
தவஞ்செய்த தவந்தான் காண்மின்.

கலைமலி மதியினால் காண்டரு சிறப்பினோர்க்கு எட்டாது நின்ற காட்சி யெங்குமில்லை. மள்ளரும் மன்னரும் மாதவ முனிவரும் வன்தொழிலரக்கரும் பம்பு கலைக் கம்பருக்குமுன் தத்தம் உள்ளமும் உயிரும்ஊனுறை வாழ்க்கையும் மறைத்தலின்றித் திறந்துகாட்டுகின்றனர். குவளை யனைய மலர்கள் தம் காதன்மகளிர் கண்முதலிய உறுப்புக்களைக் காட்டினவென்று களைகலாது உலவிநின்ற தண்வய லுழவர்தம் தன்மையை வியப்பார் ஒருசிறை. மைந்தர் மனங்களைக் கிடந்துணை உத்தராசங்கத்தொளிந்திருக்கும் கூற்றங்களின்கொம்மை வெம்மையை நயந்தவ ரிவரென நவில்வார் ஒருபுறம். வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும் விருந்துமன்றி வேறொன்றும் விளையாத இல்லற மாண்பினை இனிது போற்றுவார் ஒருபால். கன்னியர்க் கமைவரும் கற்பின் மாநிலந்தன்னைத் தருமங் கைதரக் காக்குமொரு மன்னறத்தின் மேன்மையைச் சாற்றுவார் ஒருமுறை. பாவி கூனியேமுதல் கொற்றத்தார்க் குரிசில் பரதனே ஈறாக அரண்மனை வைகுவோர் மனமும் மொழியும் செய்கையும் கம்பருக்கு மறைபொருள் ஆவதில்லை. இப்படியே ஒவ்வொருவர் திறத்தையும் ஒப்புயர்வின்றி உரைத்துவந்த கம்பர் இவ் வாரணிய காண்டத்தின் முதற்பகுதியில் தவத்துறைச் செல்வர்தம் சூழலைச் சேர்ந்தபோது கனிந்தசிந்தை முனிவரர் கேண்மையால் நம் புலவர்பெருமான் தன்னையே தான் வென்றுயர்ந்தாரென விளங்கவரு வைபவத்தை உளங்கொண்டொருநா ளுவந்தாரும் உய்யுநெறி யுய்த்திடுதல் மெய்யே. கம்பரே வழிகாட்ட, கரியசெம்மல் இராமனே உடன்வரத் தமிழ்தந்த அகத்தியனே அருந்தவமமர்ந்த உறையுளிற் கருகே ஏகுவோர் செய்த பாக்கியம் சிறியதோ பெரியதோ செப்பல் மிகை.காமத்தின் செம்பாக மீதென்னக் கற்பிக்கவல்ல கம்பர்தம் நாவிற்கே, மாதவத்தின் ஊதியம் யாதென்ன நயமுற நவில்தலு மியலும். சரபங்கனது உறையுளை அரிதின் நீங்கிய இராகவன் தண்டகவனம் நண்ணுதலும்,வாலகில்லர்முதலாயதவவரர் அவனைக் கண்டு,மழைவர உயிர்பெறும் உலவை போலத் தளிர்த்து, தாய்வர நோக்கிய கன்றெனக் களித்து, அரக்கர் என்னும் கடலிடை ஆழ்கின்றவர் ஒரு மரக்கலம் பெற்றென மறுக்கம் நீங்கி, பிறவி வெந்துயர்ப் பெருஞ்சிறை வீடுபெற்றனைய பெற்றியராயினர். ஆகி, அவனை எதிர்கொண்டு அவன் தொழுந்தொறுந் தொழுந்தொறும் ஆசிகள் கூறித் தனியிடஞ்சார்ந்த பின், தாம் படும் இடர்களை எடுத்துரைக்கத் தொடங்கினராய்,

இரக்கமென் றொருபொரு ளிலாத நெஞ்சின
ரரக்கரென் றுளர்சில ரறத்தி னீங்கினர்
நெருக்கவும் யாம்படர் நெறியலா நெறி
துரக்கவு மருந்தவத் துறையு ணீங்கினேம்

[இரக்கம் என்பதே இல்லாத மனமுடையவர்களும், தருமத்தினின்று விலகினரும் ஆகிய அரக்கர் என்று சொல்லப் படுபவர் சிலர் இருக்கின்றனர். அவர் எங்களை வருத்துவதாலும், எமக்கு உரிய வழியல்லாத வழியில் அவர் எம்மைத் துரத்துவதாலும் அரிய தவத்தினின்று நாங்கள் நீங்கினவராயினோம்]

என அரக்கரெனும் ஓர் இனத்தவர் இருக்கின்றார்களென்பதே இராமன் அறிந்திரானென்று மதித்து, "அரக்கர் என்று உளர் சிலர்" எனக் குழந்தைக்குக் கூறுவதுபோல் அறிமுகஞ் செய்து,

வல்லியம் பலதிரி வனத்து மானென
எல்லியும் பகலுநொந் திரங்கி யாற்றலெஞ்
சொல்லிய வறநெறித் துறையு நீங்கினெம்
வில்லியன் மொய்ம்பிநுய் வீடு காண்குமோ.

[வில்லாற்றலுடைய வீரனே, புலிகள் பல திரிகின்ற காட்டிலுள்ள மான்கள்போல் இரவும் பகலும் நொந்துமிக வருந்தி அவர் கொடுமைகளை இனித் தாங்கமாட்டாதவர்களாயிருக்கின்றோம். முன் சொன்னபடி தருமநெறியினின்று நீங்கினவர்களும் ஆயினோம். இந் நிலையிலிருந்து எமக்கு விமோசனமும் உண்டாகுமோ]

மாதவத் தொழுகலெ மறைகள் யாவையு
மோதலெ மோதுவார்க் குதவ லாற்றலெ
மூதெரி வளர்க்கிலெ முறையி னீங்கின
மாதலி னந்தண ரேயு மாகிலேம்

[தவநெறியில் நிற்கின்றோமில்லை. வேதங்களை ஓதுகின்றோமில்லை; ஓதுகின்றவர்களுக்கு உதவியாய்க் கற்பிக்கின்றோமில்லை; பழைய ஓமத்தீயை வளர்க்கின்றோமில்லை.இவ்வண்ணம் எம் முறையினின்று நீங்கிவிட்டோ மாதலின் அந்தணர்களும் ஆகின்றோ மில்லையே]

எனினும், 'நாங்களேன் இந்திரன் முதலிய தேவர்களின் துணைநாடி எம் துயரைத் தீர்த்துக்கொள்ளவில்லை,' என்று நீ கேட்பாயேல்—

இந்திர னெனினவ னரக்க ரேயின
சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையான்
எந்தைமற் றியாருள ரிடுக்க ணீக்குவார்
வந்தனை யாஞ்செய்த தவத்தின் மாட்சியால்

[தேவேந்திரனோ என்றால், அரக்கர் இட்ட கட்டளையை மனத்திலும் தலையிலும் வைத்துத் தாங்கும் செய்கையனுயிருக்கின்றான்—இந்நிலையில், எம் துன்பங்களைத் தீர்ப்பவர் யாரிருக்கின்றார். எனினும் யாம்செய்த தவத்தின் பெருமையால், எம் தந்தை போல்பவனே, நீ வந்தாய்]

என்றாரேனும், தம்மைப்போல் இந்திரனும் இடர் பட்டிருந்த அவத்தையைக் கூறினாரன்றி இப் பேதைமாதவர் வாசவனைப் பரிகசித்து இளிவரப் பேசினாரெனக் கொள்ளல் அவர்தம் உத்தமகுணத்திற்கு அயலாகும். இனி,

உருளுடை நேமியா லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளுடை வைகலே மிரவி தோன்றினை
யருளுடை வீரநின் னபயம் யாமென்றார்

[உருள்கின்ற ஆக்ஞாசக்கரத்தினால் உலகத்தைக் காத்த செல்வமுடைய மன்னவன் புதல்வனே, நீங்காத இருள் சூழ்ந்த வாழ்நாட்களைச் செலுத்திவந்த எங்களுக்கிடையே சூரியன்போல் தோன்றினை. அருள் உடைய வீரனே, நாங்கள் உனக்கு அடைக்கலம்]

என்று இராமபிரானிடத்தில் முனிவர்கள் விண்ணப்பஞ் செய்துகொண்டனர்.

தவத்தின் பெருமை கம்பரது கலைநிறைந்த கருத்தில் புத்துருப்பெற்ற மேன்மையடங்கலும் உணரவேண்டுமெனின், தவமே நிறைந்த வான்மீகிமுனிவர் இவ் விண்ணப்பத்தை எவ்வகை வழங்கவைத்தாரென்பதை இங்கு ஒப்புநோக்க வேண்டும்; வடநூலில் வந்தவத் தண்டகவன முனிவர்கள் இராமனை நோக்கி,

"ஐயா, தாஙகள் இக்ஷ்வாகு குலத்திற்கும் இவ்வுலகத்திற்கும் முதல்வராயும் யஜமானராயும் இருக்கின்றீர்கள். தேவர்களுக்கெல்லாம் எவ்வாறு இந்திரன் எஜமானனோ அதுபோல் எங்களுக்கெல்லாம் எஜமானன் தாங்களே, தங்களுடைய புகழும் பராக்கிரமும் மூவுலகத்திலும் பரவியிருக்கின்றன. அவைகளைப் போலவே, தந்தை சொல்லில் தாங்கள் வைத்திருக்கும் கௌரவமும் உண்மையும் தருமமுந் தங்களிடம் விளங்குகின்றன.........தனது குடிகளிடமிருந்து ஆறிலொரு கடமை வாங்கிக்கொண்டு அவர்களைத் தனது பிள்ளைகளைப்போல் இரக்ஷிக்காத அரசனது பாவம் மிகப் பெரியது. அப்படியில்லாமல் எந்த அரசன் தன்னுயிரைப் போலவும் அவ்வுயிரினு மினிய தனது சொந்தப் பிள்ளைகளைப்போலவும் குடிகளைப் பரிபாலனம் பண்ணுவதிலேயே எப்பொழுதுங் கவலையுள்ளவனாக விருந்து தன் னாட்டி லுள்ளவர்களைக் காப்பாற்றி வருகின்றானோ அவன் அநேக வருஷங்கள் இவ்வுலகத்தில் நிற்கும் அழியாத புகழைப்பெற்றுப் பிறகு பிரமலோகத்திலும் பெருமை பெறுவான். காட்டில் கனிகளையுங் கிழங்குகளையும் புசித்துக்கொண்டு தவம்புரியுந் தவத்தினர்களை எந்த அரசன் காப்பாற்றுகிறானோ அவன் அத்தவத்தினர்களுடைய தவத்தில் நான்கிலொரு பாகத்தைக் கடமையாகப் பெறுவான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது...............கொடிய செயல்களையே நோன்பெனக் கருதியிருக்கும் அரக்கர்கள் இவ்வனத்தில் ரிஷிகளுக்குச் செய்யும் தீமைகளைப் பார்த்து எங்களால் சகிக்க முடியவில்லை. ஆகையால் நாங்கள்எல்லாரும், சரண மென்றடையுந் தங்களை இப்பொழுது சரணமாக அடைந்திருக்கின்றோம்......தங்களைவிட இவ்வுலகத்தில் ரக்ஷிக்கக்கூடியவர் வேறொருவரு மில்லை"

என்று கூறினர். இதனில் இவர், 'எங்களைக் காவாயேல் உனக்குப் பாவம் பெரிது விளையும். காப்பது கடனென்பதன்றியும், எங்கள் தவத்தின் நாலிலொருகூறு உனக்குக் கிடைக்கும் ஊதியமும் உளது' என்றெடுத்துக் காட்டுவது சிறியன சிந்திக்கு மொரு பரிபவம் போல்தோன்றியதால் நம் தமிழ்ப்பெருந்தகை அன்ன மொழிகளைத் தம் நூலினுள் பயிலாமல் முனிவர்தம் நாவினின்று அறவே நீக்கிவிட்டனர். வடநூலில் வந்த முனிவர், உறுபயமும் ஊதியமும் உரைத்துத் தான் இராமனது துணையை வேண்டியவராக, அவை தாம் ஒன்றும் அளிக்காமல் இக் கம்பர்நூலில் அவர் இராமன்முன் இரந்துநின்ற பரிசு எதனால் நேர்ந்ததென்பதை ஓரளவு இங்குச் சிந்திக்கப்புகுவது தக்கதே. இது, தவம் என்பதன் உண்மைத்தன்மையைப்பற்றி வடநூன் முனிவருக்கும் தமிழ்ப் புலவர்க்கும் நிகழ்கின்ற கருத்துவேறுபாட்டை மிகவும் நுண்ணியதோர் வகையில் பிரித்துக் காட்டுகின்றது. அப்பிரிவினைத் தெரியுங்கால் பழைய எண்ணங்கள் பல பெயர்தல் வேண்டும். சரபங்கரது சரித்திரத்தில் வெட்டிய சிறுவாய்க்காலே பின்னரிம் முனிவரரினத்திடைப் பெரியதோ ராறுகப் பெருகுகின்றது

தம்மைக்கொண்டே பிறரை மதிப்பது, உத்தமரேனும் அல்லரேனும், மாநுடராயினோரெல்லோர்க்கும் இயற்கை. பயம் பலன் என்னுமிவ் விருவகைப் பயன்களினன்றிக் கருதியன்றி வடமொழி ஆரியர் எச்செயலையும் இயக்கக் கற்றிலர். இந்தத்தீமையைத் தீர்ப்பதற்கே மெய்விளங்கவரு குரு நிலத்தினிடையே கண்ணன் வாயினில் 'கீதை' பிறந்ததென்னலாம். தெய்வமொழியதுவொன்றொழிய,சாத்திரமென்றிருந்தவெல்லாம், சிறியதும் பெரியதுமாய இலாபங்களை இம்மைக்கும் மறுமைக்கும் சாதித்துவைக்கவே செப்பிநின்றன. எனின், "இது செய்தால் இது பெறுவாய்" என்னுமவ் வாய்பாட்டுச் சூத்திரத்தின்படி, தவம் செய்தால் இன்ன இன்ன இலாபங்களை அடையலாம் என்னுங் கருத்தினால் பெருந்தவ முயன்றுசெய்த அம்முனிவர்கள்,வானவர் பதவியோ,அழிக்கவும் ஆக்கவும் அமைந்த ஆற்றலோ, வேறொன்றோ, தாம் விழுப்பொருள் என விழைந்ததொன்றைப் பெறுதற்குத் தவத்தைச் செய்தனரேயன்றி, தவததைத் தவத்தின்பொருட்டே சீலமெனச் செய்தவரல்லர் எனநினைக்க இடம் பெரிதுளது. தண்டகவன முனிவர் தன்னைத் தஞ்சமடைந்த வரலாற்றினை இராமன் சீதைக் கெடுத்துரைத்தபோது, "நாங்களே எங்களுடைய தவத்தின் சக்தியால் எளிதில் இவ்வரக்கர்களை நாசம்பண்ணிவிட வல்லவர்களென்று தாங்கள் சொல்லக்கூடும், ஆனால் பலநாள் சிரமப்பட்டு ஈட்டிய தவத்தை இவ்வாறு செலவிட எங்களுக்கு மனம் வரவில்லை" என்று கூறினரென வான்மீகர்நூலில் இயம்பியிருக்கின்றனர் அரக்கரது கொடுமைக்கு ஆற்றாரேனும், வேறோர் நோக்கமுடன் ஈட்டிய தவத்தை இதன்பொருட்டுச் செலவுசெய்ய மனங்கொண்டிலாத்தன்மையால்அவரதுஉள்ளக்கிடக்கை தவமன்றி அத்தவத்தின் ஊதியமே என்னும் உண்மை போதருகின்றது. இந்தக் கருத்துடைய முனிவர், அரக்கரைச் சபித்தழிப்பதில் தம்தவத்தைச் செலவிடுவதைக்காட்டிலும்,அதனில் நாலிலொருகூறு கொடுத்தேனும் இராமனைக்கொண்டு அவ்வரக்கரைக் கொல்வித்தல் வர்த்தக முறைப்படி இலாபமுடையதென்று மதித்த நீர்மைதான் அவர்களுக்குத் தக்கதேயாயிற்று.

இனி, தீயஅரக்கரை அம்முனிவரர் தாமே அழிக்காதிருந்தமைக்குக் கம்பரும்,

வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்
பூண்டுள ராயினும் பொறையி னாற்றலான்
மூண்டெழு வெகுளியை முதலி னீக்கினு
ராண்டுறை யரக்கரா லலைப்புண் டாரரோ

[தம்மைவந்து வேண்டினவர்களுக்கு அவர்கள் வேண்டினவற்றை அளிப்பதற்குரிய ஆற்றலைத் தருகின்றமெய்யான தவத்தை மேற்கொண்டிருக்கின்றார்களாயினும், பொறுமையின் வல்லமையால், மூண்டு எழும் கோபத்தை வேரோடு நீக்கினவர்களாதலின், அவ்வனத்தின்கண் வசித்த அரக்கர்களால் வருத்தப்பட்டனர்]

என்று ஓர் காரணம் கூறுகின்றனர். யாருக்கு எது வேண்டினும் அதனை அநுக்கிரகம் செய்யக்கூடியவராயிருந்தாரேயன்றி,தம்மை அலைத்த அரக்கரையும் காய்ந்தழிக்கும் வல்லமை தமக்கு இருந்ததென்பதையும் இவர் தெரிந்தவரல்லர். பொறையின் ஆற்றல் பெற்றிருந்தார்க்குத் தவத்தின தாற்றல் தெரிவ தெங்ஙனம். 'நிறைமொழி மாந்தர்' என்பதற்குப் பரிமேலழகர் வருவித்த அருள் வெகுளி என்னும் பொருள்கள் இரண்டினில், கம்பரது கடைக்கண்பார்வையாற் பழுத்த முனிவர்தாம், அருள் ஒன்றையே ஆற்றலாகக் கொண்டனர். மற்று, "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தல் அரிது", என்னுங் குற

ளிற்குப் பரிமேலழகர் வகுத்த உரையையும் ஏற்க மறுத்தார்போல்இம்முனிவர் மூண்டெழு வெகுளியை முதலின் நீக்கினவர்களாய் நின்றனர். ஆதலின் அவர்க்கு, "அரக்கரால் அலைப்புண் டிருத்தலே" எஞ் சியதாயிற்று. தவமுடையோர்க்கு இந்நிலையே தக்க தெனத் திருவள்ளுவர்,

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

என்று இயம்பிய இலக்கணத்திற்கு இம்முனிவர் இலக் கியமாயினர். எனினும், நிறைமொழியும் காக்க லாற்று வெகுளியும் உடையவர் மற்றவர் செய்கின்ற துன்பங்களைப் பொறுப்பானேன் என்ற வீரமிகுந்த பரிமேலழகர், உற்றநோய் என்பது, பிறரால் வருந் துன்பத்தை உட்கொள்ளாவண்ணம்,"உண்டி சுருங்கல் முதலியவற்றால் தம் முயிர்க்குவரும் துன்பம்" என மெல்லத் தன்னுரையைப் பெருக்கிவிட்டார். இதற் கிது பொருளாயின், 'உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்பது மாத்திரம் பிறஉயிர்களைக் குறிப்பானேன். அதுவுந் தம் முயிரையே குறித்துக்கொள்ளலா மன் றோ? தற்கொலை முதலியவைகளால் தம்முயிர்க்கு உறுகண் செய்யாமை தவத்திற்கு உருவென் றுரைத் தால் தடுப்பார் யார்.உண்டி சுருங்கலை உதாரணமாகக் காட்டாமல், "தமக்கு உற்ற நோயைப் பொறுத்தல்" என்று உரைகண்ட மணக்குடவர், கம்பரோடிணங் கிய கருத்தினராகின்றார். எனினும்,

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்

என்னுங் குறளினது உரைகளைக் கருதுமிடத்து, இரு வினையொப்புடைய தவசிகள் இவைகளை எண்ணுவது அரிதெனப் பரிமேலழகர் கம்பருடைய கருத்திற்குச் சார்பாகப் பொருளுரைக்க, மணக்குடவரோ, எண் ணில் என்பதற்கு 'ஆராயின்' எனக்கொண்டு மாறு பட நேர்கின்றனர்.

இவ்வண்ணம், தவத்தினது ஆற்றலைப்பற்றிய நினை வில் கம்பர்பிரான் வடநூல்ஆசிரியரைப் பின்பற்றாதி ருக்கின்ற பெற்றியைக் காட்டுவதன்றியும் இச்செய் யுள், திருக்குறளிற்கு வடமொழியாளர்தம் வழக்கிற் குடன்பட்டு வரைந்துள்ள உரைகளினின்றும் விலகி அவ்வக் குறள்களுக்கு எவ்வெப்பொருளே தமிழ்நாகரி கத்திற்கு ஏற்றதென்பதையும் திருத்திக்காட்டும் உத வியால் உயர்வுமிக உடையதாகின்றது. முன் ஓர் இடத்தில் உரைத்தபடி ஆதி பகவன் முதலாய்ப்பெற்ற திருவள்ளுவர், பயனின்பால் பரிவுசெல்லாத் தமிழர் நாகரிகத்தை நயந்து கொண்டாடுஞ் செவ்வியிற்றானே அவ் வாரிய மணமும் இடையிடையே விரவி வீசவரு கின்றதாதலின்,

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்

என அவ்வதிகாரத்தில் சாற்றினர். இதனில், விரும் பியவைகளை விரும்பியவாறு பெறுவதற் குரியவோர் கருவியாகத் தவத்தினை முயலும்படி வற்புறுத்துங் கொள்கை வடமொழி வழியது. தவத்தின் சிறப்புத் தவமே யன்றி முயல்வோர்க்கு அது பயக்கும் பொருள் களல்ல. ஜயமுனி மீமாம்ஸ விதியின்படி ஒன்றன் பெருமை, காரண மொன்றினால் காட்டப்புகு மள வில், குறைவடைகின்றது. எனவே, தான் வேண்டிய வைகளை அடையும்பொருட்டுத் தவத்தைச் செய்ய வேண்டும் என்னும் கருத்தினாலும், அக்கருத்தைக் காரணமாகக்கூறும் முறையினாலும், தவத்தின் மாண்பினிற்கு இக்குறட்பா ஓரளவு அயலாகி நடப் பதுகண்ட கம்பர்பெருமான், "வேண்டின வேண் டினர்க்கு அளிக்கும் மெய்த்தவம்" என்று அரிதின் மாற்றிக்கொண்டனர். 'எய்தல்' என்னுஞ் சொல்லால் தவசிகள் தாமே பெற்றுக்கொள்ளும் பான்மையை அடியுடன் மறுத்து, 'அளிக்கும்' என்னுஞ் சொல் லால் பிறருக்குக்கொடுக்கும் சிறப்பையே வற்புறுத்தி னார் கம்பர். ஆதலாற்றான், வள்ளுவரது 'செய்தவ மும்' இங்கு மெய்த்தவமாக மாறிற்று. இதுவே தவத் தின் தனிப்பெருஞ் சிறப்பு.

இன்னணம், பயனுக்கன்றித் தவம் தவத்திற் காகவே முயலப்படும் சால்பினால், வடமொழியினின் றும் அவ் வடமொழியைத் தழுவியவிடத்து வள்ளுவ ரினின்றும் பிரிகின்ற பெருமையைக் கம்பர் சிறிது பின்னருஞ் சிறப்பாக மறக்காமல் காக்கின்றார். இரா மன் சுதீக்ஷ்ணரது உறையுளைச் சேர்ந்தபோது உவகை யெய்தி அவனுக்கோர் கையுறை கொடுக்க விழைந்த அம்முனிவர், "நான் என்னுடைய புண்ணிய கருமங் களால் எல்லா உலகங்களையும் செயித்துவிட்டதாக இந்திரன் எனக்குச் சொன்னான். தேவரிஷிகளும் இன்னும் மற்ற ரிஷிகளும் நிரம்பியிருக்கும் அவ்வுல கங்களை நான் எனது சக்தியால் தங்களுக்குக் கொடுக் கின்றேன். தாங்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைச் சீதா லக்ஷ்மணர்களோடு அனுபவியுங் கள்" என வான்மீகத்தில் நவின்றனர். அதே முனி வர் கம்பருடன் பயின்ற பெருமையால், தவத்தின் பயனை எய்துவதொன்றைத் தகைந்த சிந்தையராய் நின்று தவத்தைத் தவத்திற்காகவே செய்தவராதலின் "அவமிலா விருந்தாகி என்னுலைமை தவமெலாங் கொள்க தக்கிணையா" என்று தவத்தையே ஈயப் புகு வதல்லால் வேறு யாவதே அறியவல்லார்.

இன்னவாறு தவத்தின் அருமைச் சிறப்பினை உயர் வினும் உயர்ந்த உன்னத சிகரத்தில் சேர்த்தோர் தனி முடிசூட்டினார் கலைவழங்கும் வள்ளலாம் கம்பர்பிரான். ஆசையென்பதற்கெல்லாம் அடையாளமாகிய காமத் தின் மெய்த்திற முரைக்குஞ் செவ்வியில், "தன்னை யுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" என இரசவாதஞ்செய்து பகர்ந்த இந்தக் கம்பருக்குத் தவத்தின் மெய்த்திறம் விளங்கும்படி மாற்றுவது ஒரு பொருளோ! இப் புலவர்பெருமானது மனத்தகத்தே மறுபிறப்பெடுத்து அவர் மெய்பொதிந்த நாவிலே வளர்வதற்குத் தவந்தான் எத்தவம் செய்ததோ அறிகி லேம்.

# தினகர வெண்பா

[132-வது பக்கத் தொடர்ச்சி]

### அதி. 65. சொல்வன்மை

68 நித்தத்து வங்கேட்க நின்றகும்ப கன்னனுக்குச்
சித்தித்த தொன்று தினகரா—அத்தனையோ
ஆக்கமுங் கேடு மதனால் வருவதாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

[2 வங்கேளா. 5-6 சித்தத்தீ தேதொ. 12 வருதலாற்.]

### அதி. 66. வினைத்தூய்மை

69 ஈன்றாள் பசிகொண் டிருந்தாலுஞ் சோலையெல்லாந்
தேன்றாவுங் கோவைத் தினகரா—சான்றோருக்
கென்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

[2 பழிப்புண்.]

### அதி. 67. வினைத்திட்பம்

70 தப்பாமல் வீடணற்குத் தந்தோ மிலங்கையெனச்
செப்பியது செய்தான் றினகரா—இப்புவிமேற்
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

[1-2 தப்பா விபீஷணர்க்குத். 4 மிங்கென்று. 8 அப் படியே.]

### அதி. 68. வினைசெயல்வகை

71 சும்மாதே யொன்றைத் துணிந்துசெய்ய வொண் [ணாது
செம்மாலை மார்பத் தினகரா—தம்மால்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

[1-2 சும்மாதா னொன்றை. 4 வொண்ணுதே. 6மார்பா.]

### அதி. 69. தூது

72 அன்றெதிரி செய்தவினைக் கஞ்சாம லவருக்காய்ச்
சென்றுறுதி சொன்னான் றினகரா—என்று
மிறுதி பயப்பினு மஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

[1-2 அன்றே யெதிர் செய்வினைக். 2 செய்வினைக். 5 சென்றிதுதி.]

### அதி. 70. மன்னரைச்சேர்ந்தொழுகல்

73 மன்னரள வுக்கு வயதுமுறை தேவையில்லைத்
தென்னரதி காரி தினகரா—தன்னி
னிளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

[5-6 தென்ன னதிகா.]

### அதி. 71. குறிப்பறிதல்

74 கண்பார்வை யாற்குறிப்பைக் காணவெளிதோபு [ணரித்
திண்பார் புரக்குந் தினகரா—பண்பால்
அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

[4 தோபுணரிற். 5 றிண்பார். 11 பளிங்கேபோ.]

### அதி. 72. அவையறிதல்

75 சுந்தரநின் பேரவையுட் சொன்னாற் கருந்தமிழுஞ்
செந்தமிழாங் கோவைத் தினகரா—முந்தைநூல்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

[2 பாவையுளஞ்; பொவையுடன்; பேரவையிற். 13. சொற்றெரிய.]

### அதி. 73. அவையஞ்சாமை

76 ஆனை குதிரைகா லாட்படைக ளால்மிகுந்த
சேனை வளைந்தாலுந் தினகரா—வேனைப்
பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

[4 ளால் மிகுத்த.]

### அதி. 74. நாடு

77 தையலார் நாடகஞ்செய் சாலைகளுஞ் சோலைகளுஞ்
செய்யுமுறப் பல்ல தினகரா—துய்ய
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டுக் குறுப்பு.

[1-2 தையமநாட்டுச்; தையமணனுட்டுச். 3 சார்வலஞ்; சாலைவளஞ். 6 பன்று.

### அதி. 75. அரண்

78 ஆரற் சுவர்க ளரணுமோ அவ்வளவர்
சேரர்க் கிணையாந் தினகரா—வாரி
மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

[1-6 ஆற்ற லறிவுமில் லாவரணு மோவவ்வளவர் ] சேற்றலரிதே. 1 ஆரச். 4அவ்வளவாம். 8 வார; வார்த்த.-

### அதி. 76. பொருள்செயல்வகை

79 காடுமலை நாடுங் கடலோடி யும்பொருளைத்
தேடவே வேணுந் தினகரா—நாடுங்கால்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

[1-2 காடு மலையுங். 6 வேண்டுங்.]

### அதி. 77. படைமாட்சி

80 வெல்படையைக் கண்டால் மிகவும் பயந்தோடிச்
செல்படையு முண்டோ தினகரா—சொல்வலிய
கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

[6 மொன்றோ. 8 வல்லியங்; வல்லாய.]

### அதி. 78. படைச்செருக்கு

81 ஈனர் கொடைத்தமிழ் லெள்ளார் கொடைத்தமிழ்
தேனனைய நன்மைத் தினகரா—ஆனதொரு[செங்
கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

[1-2 ஈன, தோதமிழி. 1-3 ஏனர்க் கொடைத்தமி ழெள்ளார். 1-4யானருகோதத் தமிழாலெள்ளார் கோடாத் தமிழ்ச் செங். 6 கோவைத்.]

### அதி. 79. நட்பு

82 உண்மையறி கண்ணைப் புடையாரைக் கண்ட [வுடன்
றிண்மைநட்புக் கொண்டாய் தினகரா-வுண்மை
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

[2 கண்ணைப்; கன்றாப். 3புடையானைக். 6கொண்ட. 8 பண்மை; வண்மைப்.]

83 இட்டமாய் வந்தார்க் கிடுக்கணு னுலவரைத்
தெட்டவொண் ணாது தினகரா—உற்றதுகேள்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு.

### அதி. 80. நட்பாராய்தல்

84 உத்தமர்கள் சூழ்மாவை யுத்தண்ட னுள்ளமும்
சித்தமும்போற் கோவைத் தினகரா-ஒத்தாற்[முன்
குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

[1-2 உத்தமர்சூழ் மாவையுறை 4 னெண்ணமுமுன். 8 ஒத்தார்; ஒத்த; எத்தாற். 9 குடிப்பிறந்துங்.]

### அதி. 81. பழைமை

85 எப்பொழுதுந் தன்மனத்துக் கேற்கநடப் போர்க் [கொருசெய்
திப்பிழைவா ராதே தினகரா—அப்பொழுது
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்
றோதக்க நட்டார் செயின். [றுணர்க

[8 அப்பொழுதும்.]

அதி. 82. தீநட்பு

86 கோதென் றகற்றுங் குணமில்லா நட்பினரைத்
தீதென் றகற்றுந் தினகரா—யாதொன்
றுறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

[3-4 குணமில்லார் நட்பானுல்; குணமிலநட் பான வெல்லாங்.]

அதி. 83. கூடாநட்பு

87 மாறுகொண்ட வொன்னுர் வணங்கிலவ ரைப்
தேறுவது செய்யார் தினகரா-வேறு [பெரியோர்
தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு
ரழுதகண் ணீரு மனைத்து.

[8 வேறுங்.]

அதி. 84. பேதைமை

88 ஓதியுடன் கற்று முலகத்தோ டொத்தொழுகார்
தீதகலார் கோவைத் தினகரா—ஆதலினல்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

[1 ஓகையுடன். 2-4 கற்றுமுல கத்தோ டொழுகா தார். 5 தீதாவர். 8 ஆகையினல்.]

அதி. 85. புல்லறிவாண்மை

89 எம்மையுமைப் போலறிவா னீர்தகொடையேகொ
செம்மைபெற வாழுந் தினகரா--சும்மா[டையாஞ்
அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

[4 யேகொடையாற். 8 தம்மால்.]

அதி. 86. இகல்

90 ஒரவே மாறுபா டொண்ணுது வந்தானுங்
தீரவே வேண்டுந் தினகரா—கூறும்
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

[3 டொன்ருது. 10 சார்ந்தொழுக.]

அதி. 87. பகைமாட்சி

91 நால்வகையு மில்லாரை நாடாள வொட்டுவரோ
சேனுகளுங் கோவைத் தினகரா-நூல்வாய் [கான்
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்
பண்பிலன் பற்றார்க் கினிது.

[3-4 நாடாள்வோர் நாட்டுவரோ. 5 சேல்விழையுங்.]

அதி. 88. பகைத்திறந்தெரிதல்

92 வேற்றுப்பொருள்குறிக்கவேண்டாந் தொடைக்
சேற்றுட் கமலத் தினகரா—மாற்றிப் [கவசச்
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை
றகைமைக்கட் டங்கிற் றுலகு. [யாளன்

[4 தொடைக்களபச்; ஞ்சமர்க்களத்திற். 5 சோத்துக்க கத்; சேற்றுக் கமலத்.]

அதி. 89. உட்பகை

93 எப்பொழுது மொன்று யிருப்பவர்போ
[லேமறைத்துச்
செப்பமுடன் வாழ்வார் தினகரா-அப்பொழுதுஞ்
செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

[3-4 யிருப்பது போலே மறைந்து. 12 கூடாவே.]

அதி. 90. பெரியாரைப்பிழையாமை

94 எஞ்சலிலா வாழ்வுமிரா வணனும் போனதொரு
செஞ்சிலையா லன்றே தினகரா—மிஞ்சு
வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு
தகைமாண்ட தக்கார் செறின். [மென்னுங்

[1 இன்சொலிலா. 8 மிஞ்ச.]

அதி. 91. பெண்வழிச்சேறல்

95 பெண்புத்தி கேட்குமவர் பேயர்காண் மன்ன
திண்புத்தி கூறுந் தினகரா–நண்புற்றுப் [வர்க்குத்
பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி
பெண்ணே பெருமை யுடைத்து. [ஞணுடைப்

[3-4 பேய்காணு மன்னருக்குத். 6 சொல்லுங். 8 நண் புற்ற.]

அதி. 92. வரைவின்மகளிர்

96 வாரொன்று கும்பமுலை மங்கைமனம் வேறுனுல்
சேர்வதங் கென்னே தினகரா—பார்தனிலே
*உள்ளன் பிலாதாரை யூடுத லூன்கவர்ந்த
வெள்ளெலும்பை நாய்கவர்ந் தற்று.

97 ஆரத் தழுவினுமன் பில்லாப் பரத்தையரைச்
சேரத் தகுமோ தினகரா—தேரிற்
பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்க மிருட்
ஏதில் பிணந்தழீஇ யற்று. [டறையில்

[3 பாகாப். 6 தகாதே. 8 சேரிற்.]

அதி. 93. கள்ளுண்ணுமை

98 வண்டு மதுவுண மாந்தரு மொவ்வாதே
திண்டிறல்சேர் வீமா தினகரா—உண்டு
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

[1-4 வண்டு மதுவு மதந்தருமோ டொவ்வாதே; வண்டு மது மாந்தருமொவ்வாதே கெடபாகளே; மண்டமதுவுண் மாந்தருமொ டொவ்வாதே. 5 திண்டிறலின்.]

அதி. 94. சூது

99 மாபா ரதத்தின் வரலா றறிந்துசிவன்
சீர்பாதம் போற்றுந் தினகரா—வாபாதர்
ஓன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்
நன்றெய்தி வாழ்வதோ ரா று. [கொல்

[3-4 வரலாறு கண்டு சிவன்.]

அதி. 95. மருந்து

100 பைவாய் மருந்துகொண்டு பண்டிதரும்பற்றலர்க்
செய்வார்தென்கோவைத்தினகரா-மெய்வா [கென்
யிழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணேப்.

[3 பண்டிதருண். 4 பற்றறலர்கண். 5 செய்வார்கள்.]

அதி. 96. குடிமை

101 இன்னநல மின்னகுல மின்னமர பென்றிகழுஞ்
சின்னம் பலவேன் தினகரா-முன்னம்
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

[3-4 மின்னவரம் பென்றிதென்ன. 5-6 சின்னமதி யெண்ணங்; செங்நெல் சூழ்கோவைத்.]

அதி. 97. மானம்

102 மானுர் துகிலுரிய மன்றிருந்த தென்னவைந்து
சேனு பதியார் தினகரா—ஆனல்
மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கை பெருந்
பீடழிய வந்த விடத்து. [தகைமை

[3 மன்றிலிருந். 6 பதியாய்; பதிகள்.]

அதி. 98. பெருமை

103 உத்தியினு லெல்லாரு மொக்குமென வொண்ணு
சித்தசனே கோவைத் தினகரா-வைத்த [தே
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்
செய்தொழில் வேற்றுமை யால். [வாச்

[4 யொண்ணுத. 5 சித்தசனுங்.]

அதி. 99. சான்றண்மை

104 தக்க தொண்டை நன்னுடு சான்ருே ருடைத்தெ
திக்கறிய வந்தாய் தினகரா-ஒக்குமே [னுஞ்சொல்
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படுவார்.

[5 திக்கென; திக்கன 6. வந்தாயே.]

அதி. 100. பண்புடைமை

105 ஆசகனு நின்குணத்தை யன்புடனேம் பத்தாறு
தேசமுங்கொண் டாடுந் தினகரா—பேசில்
நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

[3-4 யன்புட னன்பத்தாறு.]

* இறுதியடிகள் திருக்குறளினுள்ளனவல்ல.

அதி. 101. நன்றியில்செல்வம்

106 செல்வ மிகப்படைத்துந் தியாகபோ கங்களில்
செல்வமென்னசெல்வந் தினகரா-செல்வங்[லார்
கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.
[2 மிகப் படைத்துத். 4 கங்களில்லாச்.]

அதி. 102. நாணுடைமை

107 தக்கார்க் குயிரினுநாண் தக்கதன்றோ தண்டமி
டிக்காருங் கோவைத் தினகரா-புக்கோடி [மெண்
நாணு லுயிரைத் துறப்ப ருயிர்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர்.
[2 குயிரினுந் தான். 3 தக்க துண்டோ; தக்க தல்லோ.]

அதி. 103. குடிசெயல்வகை

108 வந்துனையெல் லாரும் வணங்குமது கண்டுசிலர்
சிந்தனைசெய் தென்ன தினகரா—தந்தை சொல்
குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச் [லாற்
சுற்றமாய்ச் சுற்று முலகு.
[1 வந்தவரெல். 4 கண்டு சில.]

அதி. 104. உழவு

109 மைபார்த்த புன்பயிர்க்கும் வான்பயிர்க்கும் [போய்ப்பலகாற்
செய்பார்க்க வேண்டுந் தினகரா—மெய்பார்த்துச்
செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.
[1 மைபரந்த. 2-3 வின்ப வளர் பயிர்க்கும். 4 போய்ப் பகலாற்.]

அதி. 105. நல்குரவு

110 வெல்லுங்காண் செல்வரிட்ட வேடமவர் [வார்த்தைவிலே
செல்லுங்காண்கோவைத் தினகரா-சொல்லுங்கால்
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்
சொற்பொருள் சோர்வு படும். [தார்
[1 வெல்லலுறும். 2 வெல்வரிடம்; காதிலிட்ட. 3-4 வேட மவர்வார்த்தை. 4 வாதைவிலே.]

அதி. 106. இரவு

111 இன்றிரப்ப தாகா திரந்தாலு முன்னிடத்திற்
சென்றிரப்ப தேற்றந் தினகரா—ஒன்றை
யிரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

அதி. 107. இரவச்சம்

112 ஏகினவர்க் கில்லை யெனுஞ்சொலினு மின்னதே
தேகியென்னுஞ் சொல்லுந் தினகரா-தாகமுறும்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

## மல்லிகை மலரே!

மல்லிகை மலரே மல்லிகை மலரே!
மெல்லிய விதழுடை மல்லிகை மலரே!
கள்ளமிற் கண்ணியர் கருத்தே போன்ற
வெள்ளை நிறத்தினைப் வேண்டினே னுன்னை
மதுநிறைத் தாமரை மாபெரி தாயினும்
அதுநின் னுக வெள்ளிய தன்றே;
நறுமணங் கமழ்ந்திடும் நவீன ரோசா
குறுகிய விதழுடைக் குற்றமொன் றுடைத்து;
மற்று மதனிதழ் மடங்கியே வீழ்ந்து
யொற்றுமை யின்று யொன்றின்மே லொன்று
நின்றே யாழ்ந்த நிறத்ததா யிருத்தல்,
மன்றம் மகிழ்ந்திடு மாடற் சிறுர்கள்
நன்றெனத் தோன்ற நலமிகு முடலை
பற்பல வணிகலம் பின்னு மணிந்தே
நற்று யியற்கை நலந்தனைக் கெடுத்து
செயற்கையாம் செவிலியைச் சேர்ந்தத னுலே
இயற்கைகெட்ட இடர்த்தகைத் தம்மா! (1)

மலர்க ளாயிரம் மாநிலம் பெருக்கினும்
குலத்தினிற் சிறந்தோய் கோருவே னுன்னை;
வெண்மையா மனத்துடன் வேந்தரும் விரும்பும்
உண்மையா மெல்லிய நாற்றமு முடையோய்
அங்க மிலநங்கனு மாற்றுெரு மார்வப்
பங்கமில் லெழிலுடைப் பாவையர்ப் பொன்னே!
கொடியிடை யிருத்தலீ கோமக ளொருத்தித்
துடியிடை யசைத்துக் குறுநகைத் துவக்குழீ
முத்தமும் பின்னுறு மொளிநிறைத் தந்தப்
பத்தியோ வீதெனப் பகர்த்தகைத் தம்மா! (2)


தூயளாங் கலவதி தாயவ ளுவக்கும்
நேயமே யனைய நிறமுடை மலரே!
அன்புட னணுகுவே னனுதின முன்னை
அன்புட னெனதுள மதைவெளை யாக்கு
மலமதை யோட்டியே மாபெரு மாண்புடன்
நலமிகத் திகழ்ந்திடச் செய்குவோய் நல்லோய். (3)

அதி. 108. கயமை

113 ஓயாப் பரிவு முபசார முங்கொடையும்
தீயார்க் கொன்றுது தினகரா—வாயாரச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.
[1 ஓயாப்புரவு. 4 மும்பொறையுங். 6 குண்டாகா; கொண்ணுது.]


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மெடிகேட்டட்-டப்பி
பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேணடும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

சென்னை லயோலாக்கல்லூரி மாணவர் தமிழ்ச் சங்கத்தின் வருடக்கூட்டம் பிப்பிரவரி மாதம் 18-ந் தேதி மாலை5 மணிக்குக் கல்லூரிக் கட்டிடத்தில், மகா மஹோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் தலைமையில் கூடிற்று. ஸ்ரீமான் க. நமச்சிவாய முதலியார் 'தமிழர் யார்' என்னும் விஷயமாய் உபந்நியசித்தார். அக்காலை அவர் கூறியதாவது:—

தமிழைத் தன் தாய்மொழியாகக் கொண்டவன் தமிழன். அவனது அத் தமிழ்மொழியும் தனிமொழி. அவன்நாகரிகமும்தனியானது. அத்தகையமொழியையும் நாகரிகத்தையும் உடைய மக்கட்கூட்டம் ஆதியில் எங்கிருந்தது என்பது நிர்ணயிக்கப்படவேண்டாவா. சிந்துநதிக் கரையிலும் கங்கைநதிக் கரையிலும் வந்து சேர்ந்தவர்கள் தமிழர் என்றும், அங்கும் ஆரியர்கள் வந்து துரத்தவே தக்ஷிணம் வந்து சேர்ந்தார்கள் என்றும் ஒரு சாரார் கூறுவர். மற்றொருசாரார் இந்துமகா சமுத்திரத்திலிருந்த தரைப்பாகத்தில் தமிழர் இருந்தனர் என்றும், கடல் அத் தரைப்பாகத்தை அமிழ்த்திக்கொண்டுவிட்டபடியால் அவர்கள்தக்ஷிண இந்தியா வந்தனர் என்றும் கூறுவர். இவ்விரண்டு கொள்கைகளில், பின்னையவர் முடிவையே நான் ஏற்றுக்கொள்கின்றேன். இப்பொழுது நமது மலையாள நாட்டிலுள்ள பழக்க வழக்கங்களிற் பற்பல ஜாவா ஸுமத்திராத் தீவுகளிலும் காணப்படுகின்றன. ஜாவாவில் உபயோகிக்கப்படும் கண்ஏணி முதலியவை மலையாளத்திலும் உபயோகிக்கப்படுகின்றன. எனவேதக்ஷிணத்தைத்தொடர்ந்து ஜாவாவரையில் ஒருகாலத்தில்பூமியிருந்ததென்று ஏற்படுகின்றது. மேலும் முழுகிப்போன தரைப்பாகத்தைப்பற்றித் தொல்காப்பியமும் கூறுகின்றது. இச்சான்றுகளால் இந்துமகாசமுத்திரத்தில் இருந்த தரைப்பாகத்தில் தமிழர் இருந்தனர் என்றும், கடல் அப்பாகத்தை உட்கொண்டு அழித்துவிடவே தமிழர் தக்ஷிணத்தில் வந்து குடியேறினர் என்றும் புலப்படுகின்றது. இன்றும் தமிழர்நாகரிகத்தையும், களவியல் மணத்தையும், ஒத்தைக்கால் மந்தில்(இதுதான் நேரான பேராம்) இருக்கும் தோடர் என்று அழைக்கப்படும் துதவரிடம் காணலாம். தமிழர் நாகரிகம் புராதனமானது.

இவ்வுபந்நியாசம் முடிந்ததும் தலைவர்,தமிழைத்தாய் மொழியாகக் கொண்டவன் தமிழன் என்று உபந்நியாசகர் காட்டிய முடிவைத் தாம் ஏற்பதாகவும், சங்க நூல்களில் ஒரு எழுத்தும் தெரியாமல் சங்க கால நிர்ணயம் செய்யப்படுகின்றதென்றும், பாஷாஞான வளர்ச்சி வேண்டுமென்றும், சிறு பிள்ளைகளுக்குப் பாஷாஞானம் ஏற்படாத வகையில் புத்தகவியாபார இலாபங்கருதிச் சுமக்கமுடியாத புத்தகங்கள் பள்ளிக்கூடங்களில் வைக்கப்பெறுகின்றன வென்றும், தர்ப்பைப்புல்லும் கையுமாய் வந்த ஆரியர்கள் தமக்குமுன் இந்தியாவிலிருந்த திராவிடர்களைத் துரத்தியடித்தனர் என்பதைக் காட்டிலும், வந்தவர்களுடைய சீலத்தைக் கண்டு நாணினவர்களாய்,தமிழர்கள் தாமாகவே "நழுவி விட்டனர்" என்று கொள்வதும் ஆராய்ச்சியாகுமென்றும், தமக்கு இக்கால ஆராய்ச்சியொன்றும் தெரியாது என்றும் கூறி எல்லோரும் தமிழைப் படிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்.

ஒரு கல்லூரிமாணவர் சிறிதுநேரம் புல்லாங்குழல் வாசித்தார். கழகக் காரியதரிசி ஸ்ரீமான் அப்துல் வாஹப் அவர்கள் வந்தனோபசாரங்கள் கூறியபின் அவை கலைந்தது.

***

மதுரையிலுள்ள உத்தமபாளையத்தில் நடந்து வரும் பாரதி என்னும் மாதப்பத்திரிகையின் ஆசிரியர் R. நாராயணசாமி அவர்கள் அவசரச்சட்டத்தின்படி சென்றவாரம் கைதுசெய்யப்பட்டார் என்று R சுப்பிரமணியம் என்பவர் அறிவிக்கின்றார்.

***

இராக் பிரதேசத்தில் உள்ள பாலைவனத்தின் மத்தியில், பண்டை நாகரிக ஆராய்ச்சிக் கோஷ்டியார் பூமியைத் தோண்டிப்பார்த்ததில் 15,000 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட புராதன மாளிகையொன்று அகப்பட்டதாம்.அம்மாளிகையின் ஒரு புறத்தில் 45 அடி நீளமும் 36 அடி அகலமுமுள்ள ஒருகுளம் இருந்ததாம். அக்குளத்திலிருந்து பண்டைக்கால நகைகளும், பாபிலோனிய முத்திரையுள்ள சிலஆபரணங்களும் கிடைத்தனவாம்.'

***

சென்றவாரம் மேன்மைதங்கிய கவர்னர், செட்டிநாடு சென்றிருந்தார். இராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் கானாடுகாத்தானில் கவர்னர் அவர்களை வரவேற்று உபசரித்தார் என்றும், அப்பொழுது வரவேற்பதற்கென்று போடப்பெற்ற பந்தல் அன்று இரவு 8-மணிக்குத் தீப்பற்றி எரிந்தது என்றும் தெரிகின்றது.

***

கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பிரசங்கம்செய்துகொண்டிருந்த வங்காளகவர்னரைச் சுட்டுக் கொல்லமுயன்ற மாதினைப் பிடித்தவரும், கல்கத்தாச் சர்வகலாசாலை வைஸ் சான்ஸலருமான ஹுஸேன் சுர்வாதி என்பவருக்கு அரசர் ஸர் பட்டம் அளித்துள்ளார் என்று கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.

***

மைசூரில் ஸ்ரீமான் நாயுடு என்னும் சாண்டோ ஒருவர் இருக்கின்றார். அவரது தலைமையின்கீழ் மைசூரில் தேகப்பயிற்சி வித்தியாலயம் ஒன்றுஇப்பொழுதுநிறுவப்பெற்றுளது. அவ்வித்தியாலயத்தில் சென்றவார இறுதியில் ஸ்ரீமான் நாயுடுதமது உடல்பலத்தைக்காட்டினார். 400 ராத்தல் எடையுள்ள இரும்புத் துண்டைக்காலால் தூக்கினார். இரும்புத்தகட்டைப் பல்லினால் வளைத்தார். 1½டன் எடையுள்ள மோட்டார்லாரியைத் தன் மார்பில் ஏற்றிக்கொண்டார். 7குதிரை பலமுள்ள பேபி ஆஸ்டின் மோட்டார்வண்டியைப் பல்லினால் நிறுத்தினார். முடிவில் இதைப் பார்க்கவந்திருந்த டிப்டி கமிஷனர் அப்துல்காஜித் சாகிப் புரொபஸர் நாயுடுவின் திறமையைப் பாராட்டி, உடற்பயிற்சியின் அவசியத்தை வற்புறுத்தினர்.

KALANILAYAM
REG. No. M. 2324.

—:வைத்திய ரத்ன :—
பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி. 287. மதராஸ்.
கேட்லாக் இனாம்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானுல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்திமது] நாஷனல் [1906
## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.
ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாத லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.
பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவைகளுக்கு இன்ஷியூர் செய்யுங்கள்.
குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி
மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00
திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.
ஏஜென்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.
T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
## :: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ, பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & சம்பெனி, மானேஜர்கள்.

## — திருக்குறள் —
மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.
விலை அணு 12. வி. பி. செலவு வேறு.
கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்
## :: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.
5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4
ஆரோக்கிய கிரந்தம் இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)